# லட்சக் கணக்கான சீன மக்கள் மத்தியில் தலைவர் மா தோன்றினுர்

Registered as News paper in Ceylon விலை சதம் 15






# ஈழநாடு

THE EELANADU

மலர் 11

தபால் பெட்டி எண் 49
போன்: 389

National Tamil Daily

இதழ்: 32
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் புரட்டாதி 16 றஜப் 19 விய ழக்கிழமை [2-10-69]






## விழாவில் லின்பியாபேசினுர்

ஹாங்காங், ஆக். 1

கம்யூனிஸ்ட் சீனத்தலைவர் மா-சே-துங் இன்று சீனக்குடியரசு தினவிழாவில் பகிரங்கமாக வெளிவந்து அவர் பற்றி வெளிநாடுகளில் பரவியிருந்து ஆருடங்களையெல்லாம் முறியடித்து விட்டார்.

லட்சோபம் லட்சமக்கள் மத்தியில் தலைவர் மா-ஓ தோன்றிய போது ஆரவாரம் செய்து கரஒலி எழுப்பி தம்மகிழ்ச்சியை மக்கள் அவருக்குத் தெரிவித்தனர்.

தலைவர் மா-சே-துங் கடுமையாக நோய்வாய்ப்பட்டிருப்பதாகவும், அவர்செத்துவிட்டதாகவும் கருதப்படுவதாக வெளிநாடுகளில் பத்திகைகள் செய்திகளை வெளியிட்டிருந்தன. இந்தச் செய்திகளையெல்லாம் மா-ஓ பொய்ப்பித்துவிட்டார்.

தலைவர் மா-ஓ வெளிநாட்டு ராஜ தந்திரிகளை புன்முறுவலுடன் வரவேற்றதாகவும் அவர் சிறந்த ஆரோக்கியத்துடன் இருப்பதாக பீகிங் வானொலி அறிவித்தது. குடியரசு விழாவில் கலந்து கொண்ட லட்சக்கணக்கான மக்களும் 'தலைவர் மாசே துங் நீடூழி வாழ்க' என்று கோஷமிட்டார்கள்.

தலைவர் மா-ஓவின் வாரிசு என்று அறிவிக்கப்பட்டுள்ள லிம்பியாவும் இந்த விழாவில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தியதாக அறிவிக்கப்பட்டது. இவரும் கடுமையாக புற்று நோயினுல் கஷ்டப்படுவதாக முன்னர் வெளிநாட்டு செய்திகள் கூறின.

லிம்பியால் தமது உரையில் தலைவர் மா-ஓ சிந்தனையின் வழியில் சீனமக்கள் ஒன்றுபட்டு முன்னேற வேண்டும் என்ருர்.

## பெற்ரேலியம்கூட்டுத்தாபனஊழியர்

# வெளியூர்களில் மேலும் பலர் வேலைக்குத் திரும்பியுள்ளனராம்

## ஆனுல் வேலை நிறுத்தம் நீடிக்கிறது

கொழும்பு, புதன்

பெற்ரேலியம் கூட்டுத்தாபன ஊழியர் தொடர்ந்து வேலைநிறுத்தம் செய்துவருகின்றனர்.

வெளிமாகாணங்களில் மேலும் அதிக ஊழியர்கள் வேலைக்குத் திரும்பியிருப்பதாக அரசாங்கம் அறிவித்தது.

மாத்தறை, கண்டி பிரிவுகளில் நிலைமை மேலும் திருந்தியிருப்பதாகவும் மற்ற இடங்களிலும் நிலைமை சீரடைந்திருப்பதாகவும் கூறப்பட்டது

கொழும்பில் நிலைமைமுன் போலவே இருக்கிறதென்று அதிகாரி ஒருவர் கூறினுர்.

வேலைக்குத் திரும்புவதற்கான காலக்கெடு அறிவிக்... மான ஊழியர்கள் வேலைக்குத் திரும்பியிருப்பதாகவும் பல இடங்களில் வழமை போல் வேலைகள் நடைபெறுவதாகவும் அதிகாரிகள் கூறினுர்கள்

அரசாங்கம் நிலைமையைக் கவனமாக ஆராய்ந்துவருகின்றது. புதிதாக ஆட்களை வேலைக்கு எடுப்பது பற்றி தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. ஆனுல் காலக்கெடுவுக்குள் ஊழியர்கள் வேலைக்குத் திரும்பாவிடில் வேலையிலிருந்து தாங்களாகவே விலகிக்கொண்டதாகக் கணிக்கப்படுவார்களென்றும் அவர்களுக்குப் பதில் புதிய ஊழியர்கள் எடுக்கப்படுவார்களென்றும் அரசாங்கம் ஏற்கனவே அறி...

## யாழ்ப்பாணத்தில் இன்று மாலை காந்தி நூற்றுண்டு விழா

### குன்றக்குடி அடிகள் கலந்து கொள்கிருர்

யாழ்ப்பாணம், வியா

மகாத்மா காந்தி நூற்றுண்டு விழா இன்று மாலை 5-45 மணிக்கு யாழ்ப்பாணம் ஐக்கிய மேற்பார்வை சபைக் கட்டிடத்திலுள்ள வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது,

யாழ் மாவட்ட நூற்றுண்டு விழாக் குழுவினரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இவ்விழா முதலியார் செ. சின்னத்தம்பி தலைமையில் நடைபெறும்.

சென்னை மேற்சபை உறுப்பினர் தவத்திரு குன்றக்குடி அடிகளின் சிறப்புச் சொற்பொழிவும், செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, சைவப்புலவர் சி. வல்லிபுரம் ஆகியோரின் சொற்பொழிவும் இடம்பெறும்.

இவ் வைபவத்தை முன்னிட்டு இன்று மாலை 5 மணிக்கு வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்திலிருந்து புறப்படும் ஊர்வலம் 6 மணியளவில் வீரசிங்கம் மண்டபத்தைச் சென்றடையும். (காநி)

## ஹம்பாந்தோட்டை சைக்கிள் சாவகச்சேரியில்கண்டுபிடிப்பு

மட்டுவில், செவ்.

ஹம்பாந்தோட்டையில் களவு போனதாகக் கூறப்படும் சைக்கிள் ஒன்றை சாவகச்சேரியில் நேற்று பொலிசார் கண்டுபிடித்தனர். இதுசம்பந்தமாக விசாரணை செய்யப்பட்டபோது தற்போதைய சைக்கிள சொந்தக்காரர் இலங்கையில் இல்லையென்றும், அவர் நியூசிலாந்தில் இருப்பதாகவும் தெரியவந்தது. சைக்கிளுக்கு உரிமை கோரிய அவரின் தம்பியார் ஒருவரை பொலிசார் பிணையில் செல்ல அனுமதி வழங்கினர்.

சாவகச்சேரியில் களவு போனதாகக் கூறப்படும் சைககிள் ஒன்றையும் இங்கு பொலிசார் கைப்பற்றினர்.

## கூட்டுத்தாபன ஊழியருக்கு அமைச்சரின் சலுகைகள்

கோட்டை. செவ்.

அரசாங்க கூட்டுத்தாபன தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் இன்று கைத்தொழில் மீன்பிடி அமைச்சர் திரு பிலிப் குணவர்த்தன அமைச்சர் தெரிவித்தார்.

0 42 நாள் சம்பளத்துடனுன லீவு.

0 சேமலாபநிதி உயர்வு

0 சிறுசம்பள ஊழியர்களுக்கு சம்பள உயர்வு

## மகாத்மா காந்தியும் எல்லைக் காந்தியும்



## யாழ். முஸ்லிம்களுக்கு பூநகரியில் குடியேற்றதிட்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாண நகரிலுள்ள முஸ்லிம் வட்டாரங்களில் வசிக்கும் முஸ்லிம் மக்களுக்கு மிகவும் இடநெருக்கடியும் வீடில்லாப் பிரச்னையும் ஏற்பட்டுள்ளதால்இவர்களுக்கென பூனகரியில் தனியான ஒரு குடியேற்றத்திட்டம் நிறுவவேண்டுமென யாழ்ப்பாணம் ஆட்சி மன்ற உறுப்பினர் திரு. ஜி ஜி. பொன்னம்பலம் விடுத்த வேண்டுகோளை காணி நீர்ப்பாசன அமைச்சர் திரு. சி. பி. டி. சில்வா ஏற்றுக்கொண்டுள்ளார். பூனகரியிலுள்ள பள்ளிக்குடா என்ற இடத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து ...கின்றது. காலத்துக்குக் காலம்முஸ்லிம்கள் இங்கு யாத்திரைசெல்வதுவழக்கம். யாழ்ப்பாண நகரில் முஸ்லிம்கள் இட நெருக்கடியால் அவதிப்படுவதால் அவர்களை பூனகரி பள்ளிக்குடாவில் குடியேற்ற ஒழுங்கு செய்து தருமாறு திரு. பொன்னம்பலம் எம். பி. விடுத்த வேண்டுகோளை ஏற்று அதற்கான அனுமதியை காணி நீர்ப்பாசன அமைச்சர் திரு. சி. பி. டி. சில்வா வழங்கியுள்ளார்.

முதலாவது திட்டத்தின் கீழ் யாழ்ப்பாண நகரிலுள்ள 200 முஸ்லிம்கள் இங்கு குடியேற்றப்படுவார்கள் என...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கூட்டுத்தாபன ஊழியருக்கு அமைச்சரின் சலுகைகள்

கோட்டை. செவ்.

அரசாங்க கூட்டுத்தாபன தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் இன்று கைத்தொழில் மீன்பிடி அமைச்சர் திரு பிலிப் குணவர்த்தனவைச் சந்தித்து தமது கோரிக்கைகள் பற்றி எடுத்துக்கூறியபோது அவர்களுக்கு பல சலுகைகள் வழங்க அமைச்சர் முன்வந்தார்,

இரு சாரினருக்குமிடையே இணக்கம் ஏற்பட்டாலேயே இவ்வித சலுகைகள் கிடைக்குமென்றும் அமைச்சர் தெரிவித்தார்,

0 42 நாள் சம்பளத்துடனை லீவு.

0 சேமலாபநிதி உயர்வு

0 சிறுசம்பள ஊழியர்களுக்கு சம்பள உயர்வு

அமைச்சர்வழங்கிய சலுகைகளில் மேற்குறிப்பிட்டவை முக்கியமானவை

155 ரூபாய் பெறும் சிறு ஊழியர்களுக்கு 190 ரூபாய் சம்பள உயர்வு அளிக்கப்படவிருக்கிறது.

சேமலாபநிதி 15 வீதத்தால் அதிகரிக்கப்படவிருக்கிறது.

ச ச. நிலைய மண்டபம் அமைக்க

## மல்லாகம் கிராமசபைக்கு அரசாங்கம் உதவி

யாழ்ப்பாணம், புதன்

மல்லாகம் கிராமசபையின் சனசமூக நிலையத்துக்கு அரசாங்கம் 7,500 ரூபா உதவி வழங்கியுள்ளது.

யாழ் மாவட்டத்திலேயே இக்கிராமசபைக்கே இந்த உதவி கிடைத்துள்ளது.

இந்த சனசமூக நிலையத்துக்கெனக் கட்டப்படவிருக்கும் மண்டபத்துக்கான அடிக்கல்லை இன்று உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு ஏ. ஜேசேப் நாட்டிவைப்பார். இந்த மண்டப கட்டிடத்துக்கென மல்லாகம் கிராமசபைத் தலைவர் திரு வி. பொன்னம்பலம் பொதுவக்களிடமிருந்து ரூபா 5000 வரை சேகரிக்க முயற்சி மேற்கொண்டுள்ளார்.

## கூட்டங்களைக் கண்காணிக்க பொலிஸாருக்குப் புதிய உத்தரவு

யாழ்ப்பாணம், வியாழன்

ஆட்சிமன்ற உறுப்பினர்களும், செனட்டர்களும், உள்ளூராட்சிமன்றத் தலைவர்களும் கலந்துகொள்ளும் சகல கூட்டங்களுக்கும் அந்தப் பகுதி பொலிஸ்நிலைய இன்ஸ்பெக்டர் கட்டாயம் சமூகம் கொடுக்க வேண்டுமென்று பொலிஸ் சுப்ரின்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம். வடக்கிலுள்ள சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அனுப்பிவைத்துள்ள சுற்று நிருபமொன்றில் தெரிவித்துள்ளார்.

அண்மையில் தி. மு. க. மாநாட்டின் பேச்சில் ஏற்பட்ட பிரச்னையைத் தொடர்ந்தே பொலிஸ் தலைமைக் காரியாலயம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

ஆட்சிமன்ற உறுப்பினர்கள், செனட்டர்கள், உள்ளூராட்சி மன்றத்தலைவர்கள் அனைவரதும் பேச்சுக்கள் முற்றுகப் பொலிசாரால் பதிவு செய்யப்பட வேண்டும் என்றும் இந்தச் சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுமட்டுமன்றி எந்தக் கூட்டத்தையும் யாராவது குழப்பமுனைந்தால் அவர்களைக் கைது செய்யும்படியும் பொலிசாருக்கு பொலிஸ் சுப்பிரின்டன் உத்தரவு வழங்கியுள்ளார்.

(கா. நி.)

## பாரத திரும்புபவருக்கு

சென்னை. செப் 30

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பும் இந்தியர்களுக்கு புனர் வாழ்வுக்கு பணவசதியளிக்க பாரத அரசாங்கம் நடவடிக்கைமேற்கொண்டுள்ளது.

பணவசதியற்றவர்களுக்கு மாதாமாதம் 50 ரூபாவாக 6 மாதம்வரை வழங்கவும் வர்த்தகத் துறையிலீடுபடுபவர்களுக்கு 2000 ரூபாவிலிருந்து 5000 ரூபா வரை வழங்கவும் காணி உள்ளவர்களுக்கு 3000 ரூபாவிலிருந்து 4,300 ரூபாவரை கடனுதவி வழங்கவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

## புதிய ஏ எஸ் பிக்கள்

யாழ்ப்பாணம், வியாழன்

காங்கேசன்துறை. உதவி பொலிஸ் சுப்பிரிண்டனுக ஜனுப் ஜோகிம் நேற்றுமுதல் பதவிஏற்றுள்ளார். கிளிநொச்சி உதவி பொலிஸ் சுப்பிரிண்டனுக திரு என்.என். டி. சில்வா நேற்று பதவிஏற்ருர். (கா நி)



மகாத்மா காந்தியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர் எல்லைக் காந்தி கான் அப்துல்கபார்கான். அவர் இப்பொழுது மகாத்மாவின் நூற்றுண்டு பிறந்த தினவிழாவில் கலந்து கொள்வதற்காக இந்தியா வந்திருக்கிருர். பல ஆண்டுகளுக்கு மகாத்மாகாந்தியும் எல்லைக் காந்தியும்சுவாரஷ்யமாக அளவளாவிமகிழ்ந்த காட்சியை சித்தரிக்கின்றதுஇப்படம். நேற்று எல்லைக் காந்தி புதுடில்லி வந்துசேர்ந்தபோது இதுவரை வெளிநாடுகளிலிருந்து வந்த எவருக்குமே கொடுக்கப்படாத வகையில் மிக உன்னதமான வரவேற்புக் கொடுக்கப்பட்டது. வடமேற்கு எல்லையில் இந்திய சுதந்திரத்துக்காகப் போராடிய மிக சிறந்த வீரர்களில் ஒருவரான அவரை ஆயிரக்கணக்கான மக்கள் ஆர்ப்பரித்து வரவேற்றனர். எல்லைக்காந்தி தம்முடன் கொண்டுவந்திருக்கும் பொருட்களை மிக எளிமையாக ஒரு துணியில் சுற்றி எடுத்துவந்திருக்கிருர். அவர் கொண்டுவந்த துணிமூடையில் இரண்டு சோடி உடுப்புகளே இருந்தன. அதனை அவரே விமானத்திலிருந்து எடுத்து வந்தார். மாற்றுடைக்கு என்ன செய்வீர்கள் என்று கேட்டபோது துவைத்துக் கொள்வேன் என்று அவர் பதிலிறுத்தார்.

## 21 நாடுகள் காந்தி முத்திரை வெளியிடும்

புதுடில்லி, செப். 30

காந்தி நூற்றுண்டு விழாவை முன்னிட்டு 21 நாடுகள் காந்திஜி நினைவு முத்திரைகளை வெளியிடவிருக்கின்றன.

பிரிட்டன், ஐக்கிய அரபுக் குடியரசு ஆகிய நாடுகள் இதில் அடங்கும் சோமாலியா நாட்டு கரந்திஜி முத்திரைகள் பாரதத்திலேயே அச்சடிக்கப்பட்டுள்ளன.

## தபால் கட்டணங்கள் குறைக்க முயற்சி

டோக்கியோ, செப். 30

சர்வதேச தபால் யூனியன்களின் மகாநாடு நாளை டோக்கியோவில் ஆரம்பமாகிறது.

இந்த மகாநாட்டில் தபால் கட்டணங்கள் குறைப்பது பற்றி ஆராயப்படவிருக்கிறது.

131 நாடுகளைச் சேர்ந்த 600க்கும் அதிகமான பிரதிநிதிகள் இம்மகாநாட்டில் கலந்துகொள்கிருர்கள்

...ந்தியிருப்பதாகவும் மற்ற இடங்களிலும் நிலைமை சீரடைந்திருப்பதாகவும் கூறப்பட்டது

கொழும்பில் நிலைமைமுன் போலவே இருக்கிறதென்று அதிகாரி ஒருவர் கூறினுர்.

வேலைக்குத் திரும்புவதற்கான காலக்கெடு அறிவிக்கப்பட்ட பின்னர் ஏராள...வுக்குள் ஊழியர்கள் வேலைக்குத் திரும்பாவிடில் வேலையிலிருந்து தாங்களாகவே விலகிக்கொண்டதாகக் கணிக்கப்படுவார்களென்றும் அவர்களுக்குப் பதில் புதிய ஊழியர்கள் எடுக்கப்படுவார்களென்றும் அரசாங்கம் ஏற்கனவே அறிவித்திருக்கின்றது.

கோண்டாவில் கலவரம் பற்றி

## பொலிஸ் சுப்பிரின்டனுடன் நல்லூர் எம். பி. பேச்சுவார்த்தை

யாழ்ப்பாணம், வியாழன்

கோண்டாவிலில் சிறுபான்மைச் சமூகத்தைச்சேர்ந்த இரு பகுதியினருக்கிடையே எற்பட்டிருக்கும்பிரச்னையை அமைதியாகத்தீர்த்து அங்கு நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தித்தருமாறு நல்லூர் எம் பி. டாக்டர் ஈ. எம். வி நாகநாதன் நேற்று வடபகுதிப்பொலிஸ் சுப்பிரின்டனைச் சந்தித்துக் கேட்டுக்கொண்டார்.

இரண்டு தினங்களுக்கு முன்னர் இங்கு நடைபெற்ற தீவைப்பு, கைகலப்புச்சம்பவங்களில் படுகாயமடைந்த 7 பேரும் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதுசம்பந்தமாக பொலிசில் சரணடைந்த 6 பேரும் யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் நேற்று கோப்பாய்ப் பொலிசாரால் ஆஜர்செய்யப்பட்டபின்னர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

கோண்டாவிலில் நடைபெற்ற இச்சம்பவத்தில் பயங்கர ஆயுதங்களும், எறிகுண்டுகளும் தாராளமாகப் பாவிக்கப்பட்டதாகவும், இதனுல் இப்பகுதி மக்கள் எந்த நேரமும் பயங்கர சூழ்நிலையிலேயே வசிக்க வேண்டியிருப்பதாகவும் டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் பொலிஸ் சுப்பிரின்டனுடன் பேச்சுவார்த்தை நடத்தியபோது எடுத்துச் சொன்னுர்.

கைகலப்பு நடைபெற்ற இடத்துச்கு ஆயுதம்தாங்கிய பொலிஸாரை இரவு நேரத்தில் கடமையாற்ற அனுப்புவதாகவும், பொலிஸாரின் ரோந்து நடவடிக்கையை இப்பகுதியில் அதிகரிப்பதாகவும் பொலில்சுப்பிரின்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம் இங்கு உறுதியளித்தார்.

டாக்டர் நாகநாதனுடன், கொக்குவில் கிராமசபை உறுப்பினர்களான ந. அருஞசலமும், ப சின்னத்துரையும் இன்னும் சிலரும் சென்றிருந்தனர். (கா. நி.)

## உத்தமருள்ளே உயர்ந்தவர்

உலகம் தந்த உத்தமருள்ளே உயர்ந்தவர் உத்தமர் மகான்காந்தி
நிலவும்புகழை நிலையாக்கண்ட நித்தியர் சத்திய நெறிக்காந்தி
உலவும் பொருளும் குலவும்சுகமும் உதவா சத்திய நெறியொன்றே
பலவும் அதுவே பயனும்தருமே பயின்றவர் பண்புரை அதுவென்ருர்!

ஆங்கில ஆட்சி அடிமைகளாக்க அனைவரும் அவதியில் ஆழ்ந்தனரே
வீங்கியதுயரால் வெந்திடுமக்களைக் காத்திடவீரரும் துணிந்தனரே
தாங்கிட அகிம்சைப் புணைதனைத்தந்து தரணியில் தாமே தலைநின்ருர்
ஏங்கிய மக்கள் துயர்களைந்தெங்கும் எவர்க்கும் சுதந்திரம் எதிலுமென்ருர்!

சாதிகள் என்றும் சழுக்குகள் என்றும் சமயங்கள் சொல்வதிற் சாரமில்லை
ஆதியில் இரண்டு சாதிகள் உண்டு அடுத்தவை வந்தவர் வகுத்துவைத்தார்
பாதியில் பிறந்ததைப் படுகுழிக்காக்கல் பகுத்தறிவாண்மையு மழகுமென்ருர்
சேதியை விடுத்துச் செய்வதைத்திருத்திச் செகத்தினில் வீரராய்வாழ்வமென்ருர்!

கத்தியும் வேண்டாம் இரத்தமும் வேண்டாம் சத்தியம் இருக்கு அதுபோதும்
நித்தியவிரதம் சத்தியம் புரதம் அகிம்சையேதான் ஒரு பத்தியமாம்
சத்தியராமன் தசரதராமன் நித்திய ராம பஜனையுண்டு
எத்தியவலியும் ஏத்தியவலியும் எங்கும் எதிலும் எமக்குண்டு!

காந்திக்கு நாட்டினில் சிலைவேணும் கவின்பெறும் அழகினைத் தொழவேணும்
சாந்திக்கு அவன்புகழ் சொலவேணும் சத்திய வழிதனிற் செலவேணும்
நான்திக்கு அவன் திறம் தெரியோணும் நல்லவர் வல்லவர் எனவேணும்
வான்திக்கு நிதம் அவர் நிலவோணும் வண்டமிழ்க் காந்தியென்ருளிரோணும்!

— மேலைப் புலோலி மு. சு. கதிர்காமத்தம்பி —

...மெனி யாழ்ப்பாணம் ஆட்சி மன்ற உறுப்பினர் திரு. ஜி ஜி. பொன்னம்பலம் விடுத்த வேண்டுகோளை காணி நீர்ப்பாசன அமைச்சர் திரு. சி. பி. டி. சில்வா ஏற்றுக்கொண்டுள்ளார். பூனகரியிலுள்ள பள்ளிக்குடா என்ற இடத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து 200 முஸ்லிம்களை குடியேற்ற அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பூனகரி தெற்கில் மூன்று மைல் தூரத்தில் இருக்கும் பள்ளிக்குடா என்ற இடம் முஸ்லிம் மக்களின் ஒருசரித்திர சம்பந்தமான பழைய கிராமம். இங்கு ஒரு பழைய பள்ளிவாசல் மட்டும் இருக்...

வேண்டுகோளை ஏற்று அதற்கான அனுமதியை காணி நீர்ப்பாசன அமைச்சர் திரு. சி. பி. டி. சில்வா வழங்கியுள்ளார்.

முதலாவது திட்டத்தின் கீழ் யாழ்ப்பாண நகரிலுள்ள 200 முஸ்லிம்கள் இங்கு குடியேற்றப்படுவார்கள் என யாழ்ப்பாணம் செயலகத்தைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இப்பகுதி நீர்வளம்பற்றி ஆராய்வதற்காக நீர்ப்பாசன இலாகா 300 அடி ஆழமான குழாய்க் கிணறுகளைத் தோண்டி தண்ணீர்ப் பரிசோதனையை இப்போது மேற்கொண்டுள்ளது.

இந்தியக்கரையில்

## இலங்கை மீனவர் ஐவர் கைதாகி விடுதலை

கோப்பாய், புதன்

சேந்தாங் குளத்திலிருந்து மீன்பிடிப்பதற்குக் படகில் சென்ற ஐவர் இந்தியக் கரையில் வைத்துக் கைது செய்யப்பட்டனர். எனினும் தஞ்சாவூர் மாவட்ட சுங்கப்பகுதி பொலிஸாருடன் நேரடியாக இங்கிருந்து தொடர்புகொள்ளப்பட்டு அவர்கள் விடுதலை செய்யப்பட்டு. மீண்டும் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

கே. அலோசியஸ், எம். கைத்தாம்பிள்ளை அல்லது தேவதாஸ், எம். கிறுஸ்துராசா அல்லது ராசா, பீட்டர் அன்டன் பீரிஸ் அல்லது அன்டன், கே, செல்லத்துரை ஆகிய ஐவருமே இந்தியாவில் கைது செய்யப்பட்டு விடுதலையானவர்களாவர்.

கடந்தமாதம் 16-ந் திகதி கடற்ருெழிலுக்கென சேந்தாங்குளத்திலிருந்து 'டயஸ்' என்ற படகில் புறப்பட்ட இவர்கள் நடுவழியில் படகில்ஏற்பட்ட கோளாறு காரணமாக திசைமாறிச்சென்று இந்தியக் கரையையடைந்ததாகவும். அங்கு சுங்கஇலாகாவைச் சேர்ந்த பொலிசார் இவர்களைக் கள்ளத்தோணிகளெனச் சந்தேகித்து கைதுசெய்து தடுப்புக் காவலில் வைத்ததாகவும் விவரம் தெரியவந்தது.

பழுதடைந்த படகில் 3 தினங்கள்ஆழ்சமுத்திரத்தில் இவர்கள்தத்தளித்தனராம். இச்செய்தியறிந்ததும் பிரஸ்தாப மீனவர்களை மீட்பதற்கு இங்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. கடற்ருெழிலாளரின் ஆலோசகரும், கோப்பாய் கிராமசபைத் தலைவருமான திரு. ரி. பரமானந்தராசா உடனடியாக மேற்கொண்டநடவடிக்கை காரணமாகவே இம்மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். திரு. பரமானந்தராசா இந்தியா சென்று அங்கு தஞ்சாவூர் சுங்கப்பகுதிப் பொலிசாருடன் நிலைமையை விளக்கிப்பேச்சுவார்த்தை நடத்தியதைத்தொடர்ந்து இம்மீனவர்கள் இலங்கைக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்பட்டனர்.

கோட்டை, செவ்வாய்

மகாவலிகங்கையை திசை திருப்பும் திட்டத்தை செயல்படுத்த ஈடுபட்டிருக்கும் 20 ஸ்தாபனங்களில் இலங்கையைச் சேர்ந்த ஒரு தனியார் ஸ்தாபனமும் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளது. இதனை இன்று காணி அமைச்சர் திரு சி. பி.டி. சில்வா தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### வாடகைக்கு

கிளிநொச்சி, கரடிப்போக்குச் சந்தியில் இரண்டு கடைகள் வாடகைக்குண்டு. விபரங்களுக்கு: ஆ. ச. சங்கரப்பிள்ளை அன் பிறதர்ஸ், 166, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1444

### தேவை

40,45 வயதுடைய கொழும்பு வீதிகள் நன்கு தெரிந்த திறமையான கார்ச்சாரதி தேவை. விண்ணப்பிக்கவும்: 27/5, கனல்ரோ, கொழும்பு-1. 1447

விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் போதிப்பதற்கு ஆசிரியர்கள் தேவை. பட்டதாரிகள்/ G. C. E. (A.L.) தோற்றியவர்களும் விண்ணப்பிக்கலாம். யாழ்ப்பாண டியூட்டோரியல் கல்லூரி, 60, அரசடி வீதி யாழ்ப்பாணம். 1446

பெயின்ற் இரும்பு வியாபாரத்தில் தேர்ச்சி பெற்ற ஓர் காஷியர் தேவை. நேரில் விண்ணப்பிக்கவும். பிணைப்பணம் ரூபா 1000,00 சூரியப்பிரகாஸ் ஸ்ரோஸ் வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம். 1451

### விற்பனைக்கு

கிளிநொச்சியில் இருக்கும் ஒரு பிரபல அடைவு கடை விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 1426, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 1426

கொட்டடி சிவன்பண்ணை வீதியில் கட்டடம் கட்டக்கூடிய மூன்று பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு. சி எம். செல்லப்பா, 33 சிவன்பண்ணைவீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். 1449

காங்கேசன் துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வெற்றுச் சாக்குகள் 2-10-69 மாலை 4 மணிக்கு சங்கத்தில் வைத்து விற்கப்படும். வாங்குபவர்கள் உடன் பணம் செலுத்தி அன்றே சாக்குகளை அப்புறப்படுத்த வேண்டும். சு. பூதப்பிள்ளை, கௌரவ செயலாளர். 1448

4 மாதச் சினையையுடைய கேப்பைச்சாதி இளம் பசுமாடும் 8 மாதப் பசுக்கன்றும் விற்பனைக்குண்டு. 12 போத்தல் கறக்கும், முத்தையா, 103/1, கண்டி வீதி. யாழ்ப்பாணம். 1450

## நினைவு கூர்தல்

அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவிகளான செல்விகள் லீலாவதி, இந்திராணி ஆகியோரின் அன்புத்தந்தையும், வர்த்தகர் திரு. ஆறுமுகம் (மாவிட்டபுரம்), திரு. குமாரகுலசிங்கம் (சுப்பிறின்ரெண்டன்ற்) ஆகியோரின் சகோதரரும், இலங்கை விவசாய கைத்தொழில் அபிவிருத்தி தாபனத் தலைவர் சதா. நடராசா அவர்களின் மைத்துனருமான அமரர் வ. செல்லையா (மலாயன் பென்சனியர்) அவர்களின் ஆத்மா சாந்தியடைவதற்காக, உற்ருர், உறவினர்கள் அன்னரின் இல்லத்தில் (''கற்பக வில்லா'', வேம்பிராய், மீசாலை) அந்தியேஷ்டிதினத்தை இன்று கொண்டாடுகின்றனர் 1442


**வெஸ்லி சினிமா**
மானிப்பாய்
தினசரி6-30, இரவு10-00
பிரிபோயா, போயா 2-30மணி
N.T.ராமராவ் - அஞ்சலிதேவி
நடித்த
**பால நாகம்மா**

**ஸ்ரீ காலிங்கா**
இணுவில்
தினசரி 6-30, 9-30 மணி
பிரிபோயா, போயா 2-30 மணி
எம். ஜி. ஆர். -சரோஜாதேவி
நடித்த
**திருடாதே**

வல்வெட்டித்துறை
**றஞ்சனு தியேட்டர்**
தினசரி 6-30, 9-30.
பிரிபோயா, போயா 2-30
சிவாஜி - கண்ணும்பா - கிரிஜா
நடித்த
**மனோகரா**
(புதிய கொப்பி)

**வின்ஸர்**
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம் ஜி ஆர் - ஜெயலலிதா
நடித்த
**புதிய பூமி**

**REGAL JAFFNA**
Daily 4-45, 7-00, 9-45
Poya, Prepoya 4 shows
Fredrick Stafford,
Jean Seberg
in
THE LOOTERS

**ராணி**
(யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]
சிவாஜி—நிர்மலா
சௌகார் ஜானகி
நடித்த
**லக்ஷ்மி கல்யாணம்**


யாழ். மாவட்டபாடசாலைகள்

# உதைபந்தாட்டப் போட்டிகள் நேற்று ஆரம்பமானது

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணப் பாடசாலை விளையாட்டுச் சங்கத்தினுல் யாழ். மாவட்ட பாடசாலைகளிடையே நடத்தப்படும் வருடாந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி நேற்று ஆரம்பமாகியது. இம்முறை இப்போட்டிகள் அனைத்தும் இச் சுற்றுப் போட்டியில் பங்குபற்றும் பாடசாலைகளின் மைதானங்களிலேயே நடைபெறும். போட்டிகள் இரண்டு கட்டங்களாக நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இம்முறை இச்சுற்றுப் போட்டியின் 'ஏ' பிரிவில் 15 கல்லூரிகளும், 'பி' பிரிவில் 16 கல்லூரிகளும், 'ஸி' பிரிவில் 19 கல்லூரிகளும் பங்கு பற்றுகின்றன.

இச் சுற்றுப் போட்டிகள் அடங்கிய அட்டவணைகள் அனைத்தும் அவ்வப் பாடசாலைகளுக்கு முன்கூட்டியே அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக, யாழ்ப்பாண பாடசாலை விளையாட்டுச் சங்கக் காரியதரிசி திரு. சி. பாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். (தே. நி)

## ஹாட்லி வென்றது

பருத்தித்துறை, புதன்

ஹாட்லிக் கல்லூரி முதற் பிரிவுக் கோஷ்டிக்கும், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக் கோஷ்டிக்குமிடையில் ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடந்த சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் ஹாட்லிக் கல்லூரி 1-0 கோலால் வெற்றியீட்டியது. திரு. எம். இராமகிருஷ்ணன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்,

## திருநெல்வேலி முத்தமிழ் விழா

யாழ்ப்பாணம், வியா.

திருநெல்வேலி கிழக்கு இந்து இளைஞர் இயக்கத்தின் 7-வது வருட முத்தமிழ் விழா இம்மாதம் 9-ம் 10-ம் திகதிகளில் சங்க திறந்த வெளியில் நடைபெறவிருக்கிறது,

முதலாம் நாள் விழா இளைப்பாறிய மாவட்ட நீதிபதி திரு. செ. தனபாலசிங்கம் தலைமையிலும், இரண்டாம் நாள் விழா மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம் தலைமையிலும் நடைபெறும்.

கருத்தரங்கு, பட்டிமன்றம், நகைச்சுவைக் கவியரங்கு, நடனம், இன்னிசை, மெல்லிசை, நாதஸ்வரம், நாடகம் ஆகியன இரண்டு நாள் விழாவிலும் இடம்பெறும். (கா. நி)

## ஆண்டு விழா

சுழிபுரம், புதன்

தொல்புரம் மேற்கு கலைவாணி சனசமூக நிலையத்தினரால் 16-வது ஆண்டு

## ''அன்புகாட்டும் மக்கள் உருவாகவேண்டும்''

வெள்ளவத்தை, புதன்

''இலங்கையிலுள்ள அனுதைப் பிள்ளைகள், பெண்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதே எங்களுடைய நோக்கமாகும். கொழும்பு இந்து மகளிர் மன்றத்தின் சார்பில் கஸ்தூரிபாய் இல்லம் ஒன்றினை அமைக்கத் திட்டமிட்டுள்ளோம். இதற்குப் பொதுமக்கள் தங்களாலியன்றவரை நிதியுதவி செய்தல் வேண்டும். இரக்க உணர்ச்சியும், மற்றவர்களிடம் அன்புகாட்டும் தன்மையும் கொண்ட மக்கள் உருவாகவேண்டும்.''

இவ்வாறு திருமதி, நடராசா கொழும்பு மகளிர் மன்றம்பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் ஏற்பாடு செய்த சர்வோதய தினக் கூட்டத்தில் பேசியபோது குறிப்பிட்டார்.

காந்தி சேவாசங்கச் செயலாளர் திரு. சி. க. வேலாயுதபிள்ளை பேசுகையில் ''சர்வோதய பாத்திரம் உலக மக்கள் அனைவருக்கும் பொதுவானது. ஒருநாளைக்கு ஒருபிடி அரிசி போடுங்கள். சிறுதுளி பெருவெள்ளம்போல அது தானுகவே பெருகிவிடும். எதற்கும் நல்ல இதயங்கள் தான் தேவை. காந்தியின் வழியைப் பின்பற்றி நாமும் ஈடேற்றம் அடைவோம்'' என்றுர்.

## புதிய பஸ்சேவை

யாழ்ப்பாணம், வியா.

ஆவரங்கால் சந்தியிலிருந்து யாழ்ப்பாணம் வரையான புதிய பஸ் போக்குவரத்துச்சேவை நேற்றுக் காலை ஆரம்பித்துவைக்கப்பட்டது.

கோப்பாய் எம்.பி. திரு. சி. கதிரவேற்பிள்ளை இச்சேவையை ஆரம்பித்து வைத்தார்.

## நித்திரை செய்த

பிரவேசப்பரீட்சை எழுதிய மொழி[...]

# இரண்டாந்தரப் பரீட்சையில் விடை அளிக்க வேண்டும்

### அரசாங்க ஊழியர் பற்றி திறைசேரி சுற்றறிக்கை

வெள்ளவத்தை, புதன்

அரசாங்க ஊழியர்களுக்கான இரண்டாந்தர எழுதுவினைஞர் தரம் உயர்த்தல் பரீட்சை வருகிற நவம்பர் மாதம் நடைபெறவிருக்கிறது. இது சம்பந்தமாக திறைசேரி சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளதுஎந்தெந்த மொழியில் பரீட்சார்த்திகள் பதிலளிக்கவேண்டும்என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திறைசேரி சுற்றறிக்கை கூறுவதாவது:

''எழுது வினைஞர் சேவையில் பிரவேசிப்பதற்கான போட்டிப் பரீட்சை எந்த மொழியில் எழுதப்பட்டதோ அதே மொழியிலேயே இரண்டு பரீட்சைத் தாள்களும் எழுதப்படவேண்டும். போட்டிப் பரீட்சையின்றி ஆட்சேர்ப்பு நடைபெற்றுள்ள சந்தர்ப்பங்களிலே, உத்தியோகத்தர் சேவையினுள் பிரவேசிப்பதற்காக எம்மொழியில் தகமை பெற்ருரோ அதேமொழியிலேயே பரீட்சை எழுதப்படவேண்டும். அவர்கள் விரும்பினுல் இரு பரீட்சைத் தாள்களையும் அரசகருமமொழியில் விடையளிக்கலாம்.

அரசகரும மொழிக்கொள்கையின் பொருட்டு, ஆங்கில மார்க்கத்தின் மூலம் ஆட்சேர்க்கப்பட்ட முன் சேர்ந்த உத்தியோகத்தர்கள் விரும்பினுல் இவ்விரண்டு பரீட்சைத் தாள்களையும் முழுதும்சிங்களத்திலோ ஆங்கிலத்திலோ பதிலளிக்கலாம்.''

இவ்பரீட்சைக்குரிய வகுப்புகளை அரசாங்களழுதுவினைஞர் சங்கமும், அரசாங்க லிகிதர் சேவைச் சங்கமும் (ஜி. சி. எஸ். யு தமிழ் மொழியில் ஏற்பாடு செய்து நடாத்தி வருகின்றன.

அரசாங்க எழுது வினைஞர் சங்கத்தின் வகுப்புகள் வெள்ளவத்தை நாவலர் ஹோலிலும் ஜி. சி. எஸ். யு. வகுப்புகள் பார்சன் ரேட்டிலுள்ள தலைமைக் காரியாலயக் கட்டிடத்திலும் நடைபெற்று வருகின்றன.

## இடமாற்றம்

வல்வெட்டித்துறை, புதன்

வல்வெட்டித் துறைப் பொலிஸ் நிலையத்தைச்சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர் திரு. எஸ். பி. ஜெயசிங்கா இம் மாதம் தொடக்கம் மட்டக்களப்பிற்கு மாற்றப்பட்டுள்ளார். அவரது இடத்துக்கு காங்கேசன்துறைப்பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த திரு. எல். சிறீவர்த்தனு மாற்றப்பட்டுள்ளார்.

## ஏ எஸ் பிக்கு பிரியாவிடை

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் உதவி பொலிஸ் சுப்பிரிண்டனுக கடமையாற்றி நேற்று முன்தினம் ஒய்வுபெற்ற ஜனுப் எஸ் ஐ அசீஸுக்கு நேற்று மாலை பொலிஸாரால் உத்தியோக பூர்வமான பிரியாவிடை அளிக்கப்பட்டது. இதனை முன்னிட்டு நேற்று மாலை ஸ்ரேடியம் மைதானத்தில் சுமார் 150 பொலிஸார் கலந்து கொண்ட அணிவகுப்பும் நடைபெற்றது. (சா. நி)

## அமரர் செல்லையா

(மீசாலை)




10ல் 7 நபர்கள் கோற தேநீர் அருந்துபவர்கள்.
மகிழ்ச்சி ததும்பும் 7 கோற தேநீர் அருந்துவோரை
கண்டுபிடியுங்கள்.
ரூபா 17,000/= ரொக்கப்பரிசாக பெறுங்கள்.
புறூக் பொண்ட் கோற தேயிலை போட்டியில் 200க்கும்
அதிகமான பரிசுகள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போத்தல் கறக்கும்,
முத்தையா, 103/1, கண்டி
வீதி. யாழ்ப்பாணம். 1450

in
THE LOOTERS

ராணி
(யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]

சிவாஜி—நிர்மலா
சௌகார் ஜானகி
நடித்த

லக்ஷ்மி கல்யாணம்

90வது தினம்
ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்

கடைசி 2 தினங்கள்
சுந்தரராஜன், மனோகர்,
ராமதாஸ், தங்கவேலு,
பத்மினி, பேபி ராணி
நடித்த
விஜயா: சுரேஷ் கம்பைன்ஸ்

குழந்தைக்காக

கதை-வசனம்: துறையூர் மூர்த்தி பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன்

குழந்தைக்காக நீங்கள் வாங்கும் அரை டிக்கட்டுகளை கவனமாக வைத்திருங்கள். பலபரிசுகள் காத்திருக்கின்றன உங்கள் குழந்தைக்காக!
மாதர்களுக்கு அரைக்கட்டணம்.


இப்பொழுதுநடைபெறுகிறது

வெலிங்டன்
[யாழ். நகர்]

கெப்பிட்டல்
(கொழும்பு)

பிளாஸா
(கொழும்பு)

2.10.69



ரவிச்சந்திரன் ★ ராஜஸ்ரீ
நாகேஷ் ★ அசோகன் ★ ஸ்ரீரஞ்சனி
வசந்தா ★ மனோகர்
நடித்த
ஜரிஸ் மூவிஸாரின்

நீயும் நானும்

நாடகம் ஆகியன இரண்டு நாள் விழாவிலும் இடம் பெறும். (கா. நி)

## ஆண்டு விழா

சுழிபுரம், புதன்
தொல்புரம் மேற்கு கலைவாணி சனசமூக நிலையத்தினரால் 16-வது ஆண்டு நிறைவுவிழா கிராமசபைத் தலைவர் திரு. சு. கந்தசுவாமிதலைமையில் கொண்டாடப்பட்டது, நிலையத்தின் இலங்கேஸ்வரன் நாடக மன்றத்தாரால் ''தூக்குமேடை'' என்ற சமூக நாடகமும் மேடையேற்றப்பட்டது.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**வியா. 2—10—69**

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ அன்ட் 61 மீ

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன்ட் 49 மீ

பகல் 12-00 செய்திச்சுருக்கம், 12-03 சித்திரகானம், 1-00 மாணவர் மன்றம், 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன்ட் 61 மீ

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 ஒடிவிளையாடு பாப்பா, 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 இசைப்பயிற்சி, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 வயலின் இசை, 7-35 வானொலி குறுக்கெழுத்துப் போட்டி, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி 9-30 பேச்சு 10-00 நேயர் விருப்பம், 10-30 செய்திச்சுருக்கம்.

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7, & 9-45p.m.
Poya, Prepoya 4 Shows
With the greatest constellation of stars ever eight assembled including Yul Brynner, Trevor Hawart, Omar Sharis
in
Ian Steming's
THE POPPY
IS ALSO A FLOWER
(Eastman color)

வரத்துச்சேவை நேற்றுக் காலை ஆரம்பித்துவைக்கப்பட்டது.

கோப்பாய் எம்.பி. திரு. சி. கதிரவேற்பிள்ளை இச்சேவையை ஆரம்பித்து வைத்தார்.

## நித்திரை செய்த சதி

மண்டைதீவு, புதன்
ஊர்காவற்றுறையிலிருந்து எழுவைதீவுக்குப் போக வேண்டிய ஒரு சிறுவன் நயினாதீவில் சேர்க்கப்பட்ட சம்பவம் நேற்றுமுன் தினம் தீவுப்பகுதி மோட்டார் வள்ள ஐக்கிய சங்கத்தினருக்குச் சொந்தமான படகில் நடைபெற்றது.

அப்புநாயகம் என்ற 13 வயதுச் சிறுவன் நித்திரை செய்ததினாலேயே இவ்விதம் நேர்ந்ததாம், எழுவைதீவுக் கரையில் அவரைச் சேர்ப்பதற்கு ஓர் எம். பி. உட்படப் பலர் எடுத்த முயற்சி பயனளிக்கவில்லையாம்.

இச்சிறுவன் நித்திரை செய்துகொண்டிருப்பதை எழுவைதீவுத் துறைமுகத்திலிருந்து சுமார் 25 யார் தூரத்தில் படகு சென்றுகொண்டிருந்தபோது தெரிந்துகொண்டபோதிலும் கடமையிலிருந்த கண்டெக்டர், அவரை எழுவைதீவில் இறக்க மறுப்புத் தெரிவித்துவிட்டாராம். இதனால் மறுநாள் காலையே அச்சிறு நயினாதீவிலிருந்து எழுவைதீவுக்கு வரவேண்டிய நிலை ஏற்பட்டது

## ''உபகுழு நியமிக்குக''

மானிப்பாய், புதன்
மீன்பிடி கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சியை முன்னிட்டு ஓர் உபகுழுவை நியமிக்குமாறு அகிலஇலங்கைக் கூட்டுறவுச் சம்மேளனத்தினை வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் கேட்டுக் கொண்டுள்ளது.

கடற்றொழிலாளரை எதிர்நோக்கியிருக்கும் பிரச்னைகளை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் தீர்த்துவைக்க முடியும் என்றும் இச்சங்கங்களை ஊக்குவிப்பதன் பொருட்டு இத்தகைய குழு அமைக்கப்படல் வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க



முதற் பரிசு ரூபா 3,000/- இரண்டாவது பரிசு 1,000/-
இதை விட 25 பரிசுகள் ரூபா 200/- விகிதம் 25 பரிசுகள் ரூபா 100/- விகிதம்
50 பரிசுகள் ரூபா 50/- விகிதம் மற்றும் 108 வியாபாரிகளுக்கான பரிசுகள்
ரூபா 25/- விகிதம் கவர்ச்சியாகவும், தெளிவாகவும் எழுதி அனுப்புவோருக்கும்
அதிகக் கூடுதலான பிரவேசப்பத்திரங்களை அனுப்புவோருக்கும் விசேட
ரொக்கப் பரிசுகள்

இன்று அதிகமானோரால் விரும்பப்படும் தேயிலை கோரு தூள் தேயிலை என்பதில் சந்தேகமேயில்லை. அதன் புதுமையான நறுமணத்தை மக்கள் பெரிதும் அனுபவிக்கிறார்கள். சிக்கனமானது, ஏனெனில் ஒரு பக்கட் தேயிலையில் பல கோப்பை தேநீர் தயாரிக்கலாம். நீங்கள் கொடுக்கும் பணத்திற்கு மேலான பெறுமதி கொண்டதனால் மேலும் மேலும் பலர் கோரு தேயிலையையே உபயோகிக்கிறார்கள்.

மேலேயிருக்கும் படத்தில் 10 நபர்கள் தேநீர் அருந்துவதைப் பார்க்கிறீர்கள். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு எண் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் 7 நபர்கள் கோரு தேநீர் அருந்துகிறார்கள். அவர்களின் மகிழ்ச்சியான திருப்தியான முகத்திலிருந்தே இதைக் கண்டு கொள்ளலாம். இப்பிரவேசப் பத்திரத்தில் கோரு தேநீர் அருந்துவோரைக் குறிப்பிடுங்கள். உதாரணமாக படத்திலுள்ள 1ம் எண் நபர் கோரு தேநீர் அருந்துபவரானால் பிரவேசப் பத்திரத்திலுள்ள முதல் வட்டத்தில் 1ம் எண்ணை இடுங்கள். இப்படி 7நபர்களின் எண்களையும் வட்டத்தில் நிரப்புங்கள். உங்கள் பெயர் விலாசம் ஆகியவற்றைத் தெளிவாக எழுதி பின் வரும் விலாசத்திற்கு அனுப்பி வையுங்கள்.

கோரு தூள் தேயிலைப் போட்டி,
த. பெ. இல. 832 கொழும்பு.

நீங்கள் பரிசு பெற்றால் உங்கள் வியாபாரிக்கும் பரிசு உண்டு. ஆகையால் பிரவேசப் பத்திரத்தில் உங்கள் வியாபாரியின் பெயர் விலாசம் அல்லது கடையின் பெயர் விலாசத்தைக் குறிப்பிடத் தவறாதீர்கள்.

நீங்கள் எத்தனை பிரவேசப் பத்திரங்களையும் அனுப்பலாம். ஆனால் ஒவ்வொரு பிரவேசப்பத்திரத்துடனும் ஒவ்வொரு கோருத்தூள் எந்த அளவு உறையானாலும் சேர்த்து அனுப்பப்படல் வேண்டும். விடைகளை அனுப்பும் தபால்உறையின் இடது பக்க மேல் பகுதியில் நீங்கள் அனுப்பும் பிரவேசப் பத்திரத்தின் தொகையையும் கோரு தூள் தேயிலைப்போட்டி எனவும் குறிப்பிடல் வேண்டும்.

ஒரே உறையில் யார் அதிகக் கூடுதலான பிரவேசப் பத்திரங்களை அனுப்புகிறார்களோ அவர்களுக்கே மேலதிக பரிசுகளாக ரூபா 300/- ரூபா 200/- ரூபா 100/- பரிசளிக்கப்படும்.

இப்போட்டியில் புறூக் பொன்ட் (இலங்கை) லிமிட், ஈ. பி. கிறீசி அன் கம்பனி லிமிட், ஷெனித் அட்வடைசிங் ஆகிய ஸ்தாபனங்களைச் சேர்ந்தவர்கள் பங்கு பற்ற முடியாது.

இப் போட்டி பற்றி எவ்வித கடிதப் போக்கு வரத்தும் வைத்துக் கொள்ளப்படமாட்டாது.

மத்தியஸ்தர்களின் முடிவே இறுதியானது.

முடிவுத் திகதி 1969ம் ஆண்டு அக்டோபர் 7ம் திகதி. பரிசு பெறுவோரின் பெயர்கள் பத்திரிகைகளில் அறிவிக்கப்படும்

முந்துங்கள்! இன்றே பங்கு பற்றுங்கள்!




பிரவேசப் பத்திரம்
○ ○ ○ ○ ○ ○ ○
உங்கள் பெயர்:- ..........................
விலாசம்:- ..........................
..........................
உங்கள் வியாபாரியின் பெயர்:- ..........................
விலாசம்:- ..........................
..........................
தெளிவாக எழுதவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லெபனுன் விமானத்தை எடுத்துச்செல்ல இரு ரஷ்யர்கள் முயற்சி

## துப்பாக்கிச் சண்டையில் நால்வருக்குக் காயம்

பேரூட் அக. 1

லெபனுன் அரசாங்கத்துக்குச்சொந்தமான சண்டை விமானம் ஒன்றை எடுத்துச்செல்வதற்கு சதித்திட்டம் போட்டதாகக் கூறப்படும் இரு ரஷ்யர்களுக்கும் லெபனுன் பாதுகாப்புப் படையினருக்குமிடையில் துப்பாக்கிச் சண்டை நடைபெற்றதாக அறிவிக்கப்பட்டது.

லெபனுன் அரசுக்குச் சொந்தமான பிரெஞ்சு மிராஜ் சண்டை விமானத்தை இந்த இரு ரஷ்யாக்காரர்களும் எடுத்துச்செல்வதற்குச் சதித்திட்டம் வகுத்தார்களாம் இவர்களில் ஒருவர் ராஜதந்திரி என்று கூறப்படுகின்றது. இவர்களின் நடத்தைகளை லெபனுன் அரசாங்கம் கடந்த சில மாதங்களாகவே அவதானித்து வந்ததாக அறிவிக்கப்பட்டது.

இந்த இரு ரஷ்யர்களுக்கும் லெபனுன் பாதுகாப்புப் படையினருக்குமிடையில் நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையில் இரண்டு லெபனுன் அதிகாரிகள் காயமடைந்தனர். காயமடைந்த ரஷ்யர்களில் ஒருவர் பலத்த காயங்களுக்குள்ளாகியதாகக்கூறப்பட்டது.

இந்த ரஷ்யர்களிடமிருந்து சுமார் 2500 டாலர் கரன்சிகளும் இதர பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்தச் சதியில் லெபனுன் அதிகாரி ஒருவரும் சம்பந்தப்பட்டிருப்பதாகவும் இதுபற்றி ராணுவ நீதிபதி ஒருவர் விசாரணை ஒன்றை ஆரம்பித்திருப்பதாகவும் கூறப்பட்டது.

# அரபு கொமாண்டோக்கள் நடத்திய மிகப்பெரிய தாக்குதல்

அம்மான், அக். 1

இஸ்ரேலிய நிலைகள் மீதும் குடியிருப்பு பகுதிகள் மீதும் அரபுக் கொமாண்டோ அணியைச் சேர்ந்த வீரர்கள் கடுமையான தாக்குதல்களை நேற்று நடத்திஞர்கள். ஜோர்டான் எல்லைப்பகுதியில் இஸ்ரேலியர் ஆக்கிரமித்துள்ள கோலான் பகுதியில் ஓர் இடத்தைகொமாண்டோக்கள் கைப்பற்றி வைத்திருப்பதாகவும் கூறப்படுகின்றது.

அரபுக்கொமாண்டோக்கள் நடத்திய தாக்குதல்களில் ஏராளமான இஸ்ரேலியர் கொல்லப்பட்டதாகவும் நிறைய நஷ்டம்ஏற்படுத்தப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

டெல் அவிவில் இது பற்றி அதிகாரிகள் தெரிவிக்கையில், கொமாண்டோக்கள் இதுவரை நடாத்தியுள்ள தாக்குதல்களில் இது பெரியது என்றும் ஆனல் ஆள் நஷ்டம் ஒன்றும் ஏற்படவில்லையென்றும் கூறிஞர்கள்.

— —

## "பொருளாதார ...

## "ஆசிரியருக்கு சேவை உணர்வு வேண்டும்"

இமையாணன், புதன்

"ஆசிரியத் தொழில் செய்யும் ஒவ்வொருவருக்கும் அடிப்படையில் சேவை உணர்ச்சியும், சேவைமுன்மாதிரியும்வேண்டும்" என உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் நடைபெற்ற ஒரு பிரிவுபசார வைபவத்தின் போது ஆசிரியர் திரு. கனகசபை கூறிஞர்.

மேற்படி கல்லூரியில் ஆசிரியையாகக்கடமையாற்றிய திருமதி செல்லத்துரை இராசம்மா தமது நாற்பத்திரண்டு வருட கால சேவையினின்றும் இளைப்பாறுவதை முன்னிட்டு அவருக்கு அக்கல்லூரி ஆசிரியர்களால் பிரிவுபசாரமும், இராப்போஷன விருந்தும் அளிக்கப்பட்டது.

கல்லூரியின் உப-அதிபரான றெபெர்ட் நவரத்தினம் வைபவத்திற்குத் தலைமை வகித்தார்.

பிரதம தலைமை ஆசிரியரான திரு. ஆறுமுகம்மற்றும் ...

## கேள்வியறிவிலும் காட்சிஅறிவே சிறந்தது

பண்டத்தரிப்பு, புதன்

"பலவித விழாக்கள் பல முறைகளில் உலகில கொண்டாடப்பட்டு வருகின்றன. ஆனல் கண்காட்சி மூலம் மக்கள் அதிக அறிவைப் பெறுகின்றனர். கேள்வியறிவிலும் பார்க்க காட்சியறிவின் மூலமே மக்கள் மனதில் அறிவு அதிகம் வேரூன்றுகிறது."

மேற்கண்டவாறு இளவாலை சென் ஜேம்ஸ் பஸ்கின் பக்திச்சபையினரின் 10-வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி நடைபெற்ற கண்காட்சியைத் திறந்துவைத்துப் பேசுகையில் கட்டைக்குரவர் வண. டெய்சி சுவாமியார் குறிப்பிட்டார்

இரண்டுநாட்களாக நடைபெற்ற இக்கண்காட்சியில் பாடசாலை மாணவ மாணவியர் அதிக பங்குகொண்டனர். மாலையில் ஒரு கூட்டமும் நடைபெற்றது.

— —

## ச. ச. நிலையம்

# திருடிய சைக்கிள்களை விற்றுக்கொண்டிருந்தாராம்

வல்வெட்டித்துறை, புதன்

மாசாரைச் சேர்ந்த ஒருவர் பளையைச் சேர்ந்த நெல்லியான் என்னுமிடத்திலுள்ள மூன்று வீடுகளிலும் வீட்டார் திருவிழாவுக்கு சென்ற சமயம்பார்த்து புகுந்து ஒவ்வொரு வீட்டிலுமிருந்த சைக்கிள்களை திருடி பருத்தித்துறையில் விற்றுக்கொண்டிருக்கையில் பருத்தித்துறை பொலிஸ்நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகஸ்தரான திரு. கே. கந்தையாவால் கையும் மெய்யுமாக கண்டு பிடிக்கப்பட்டதாகத் தெரிகின்றது.

சந்தேகநபரான வேலுப்பிள்ளை செல்வராசா மாட்டுக்களவு ஒன்றில் குற்றவாளியாகக் காணப்பட்டவர் என்றும், பளைப்பகுதியில் ஒரு வீட்டை உடைத்து களவாடியதாகபளைப்பொலிசாரால் தேடப்பட்டு வந்த நபரெனவும் பொலிஸ் விசாரணையின்போது தெரியவந்தது. எதிரி பளைப்பொலிசில் ஒப்படைக்கப்பட்டு விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

— —

## இ போ. சபைக்கு மகஜர்

மட்டுவில், புதன்

"சரசாலை, மட்டுவில்பகுதிகளில் உள்ள ஒடுக்கமான வீதிகளில், இ.போ.ச. பஸ் வாகனச்சாரதிகள், அசுர வேகத்தைக் கையாளுவதை, தடுப்பதற்கான வழிவகைகளை, இ.போ ச மேலதிகாரிகள் கையாள வேண்டும்". எனக் கோரும் மகஜரொன்றை இப் பகுதி விவசாயிகள் நலன்பேணுசங்கங்களும், ஏனைய பலசங்கங்களும் இ.போ.ச மேலதிகாரிகளுக்கு அனுப்பிவைத்துள்ளன.

"கனகன்புளியடி கொடிகாமம் யாழ்ப்பாணம் பஸ் சேவை, மட்டுவில் நுணுவில், வேம்பிராய், வரணி, கல்வயல், போன்ற பல தொகையான கிராமங்களுக்கு அத்தியாவசியமானதாக அமைகிறது. இந்த ஒரே ஒரு பஸ் சேவைதான் இப்படியான பல கிராமங்களின், அரசாங்க, தனியார்துறை உத்தியோகத்தர்களுக்கும், ஆசிரியர், மாணவர்களுக்கும் கைகொடுத்து உதவுகிறது.

இந்த வேளையில், இதை நம்பிய இவர்களை பல சந்தர்ப்பங்களில் இந்தப் பஸ் ...

## தேசிகர் மறைவுக்கு அனுதாபம்

கோப்பாய், புதன்

சைவமும் தமிழும் வாழப் பெருந்தொண்டாற்றி வடக்குக்கும் கிழக்கிற்கும் சமயப் பாலம் அமைத்து அண்மையில் மறைந்த சைவமெய்ப் போதகர் திரு. கா. அருணசலம் தேசிகரின் மறைவு குறித்து கோப்பாய் திருவருள் தவநெறிமன்றம் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. 'சமயக் கல்விக்குத் தேசிகர் ஆற்றிய சேவை மறக்க முடியாதது. அவரது மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு' என அத்தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

— —

இ. தி. மு. க.

## சி. ஐ. டி. அறிக்கை அட்டோர்னி ஜெனரலிடம்

கோட்டை, புதன்

இ. தி. மு. க. யாழ்ப்பாண மாநாட்டு உரை சம்பந்தமாக சட்டக்கல்லூரி மாணவர் ஒருவர் நேற்று முன்தினம் விசேட இரகசிய பொலிசாரால் விசாரணை செய்யப்பட்டார். இரத்தினசிங்கம் தயாபரன் என்ற சட்ட மாணவனும் இ. தி. மு. க. வைச் சேர்ந்த திரு ரி. நெடுமாறனும் உதவிப் பொலிஸ்சுப்பிரின்டன் திரு. எல். கந்தையாவினுல் விசாரிக்கப்பட்டனர்.

இ தி மு.க. மாநாட்டில் பேசப்பட்டதாகக் கூறப்படும் 'கொரில்லா யுத்தம்' பற்றி விசாரணை செய்வதற்காக நாளையதினம் விசேஷ இரகசியப் பொலிசார் மலைநாட்டுக்கும், யாழ்ப்பாணத்துக்கும் செல்லவிருக்கின்றனர்.

இதுசம்பந்தமாகஇரகசியப் பொலிசாரால் சேகரிக்கப்பட்ட அறிக்கையையும் சி. ஐ. டி. பகுதி பொலிஸ் சுப்ரின்டன் திரு. ஜே. ஏ. செல்வரத்தினம் அட்டோர்னி ஜெனரலிடம் சமர்ப்பித்துள்ளார்.

— —

## 'காந்தி கிராமம்' இலவச வெளியீடு

யாழ்ப்பாணம். புதன்

யாழ்ப்பாணம் மில்க்வைற் சோப் ஸ்தாபனத்தார் ...

## தாபரிப்புவழக்கில் சமரசம்

மட்டுவில், புதன்

"ஒரு நகர் புறத்தில் தாய், தந்தை மற்றும் சகோதர சகோதரிகளையும் சின்ன வீடொன்றில் அடக்கி வைத்துக்கொண்டு இளம் குடும்பம் சந்தோஷமாக வாழ முடியாதென்பதை என் கணவர் உணரவில்லை" என சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட தாபரிப்பு வழக்கொன்றில் வாதியான திருமதி பிளான்ச் டென்ஸில் மார்ட்டின் என்பவர் குறிப்பிட்டார்.

இந்த வழக்கில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த டென்ஸில் மாடடின் என்பவர் மீது தாபரிப்புப் பணம் கோரி, வட்டக்கச்சியைச் சேர்ந்த பிளாஞ்ச் என்பவர் ஒரு வழக்கை தாக்கல் செய்திருந்தார்.

நகரில் தனியான ஒருவீடு எடுத்துத் தமது கணவருடன் வாழ்வதற்கு வாதி சம்மதம் தெரிவித்து புதிதாக வாடகை வீடு எடுத்து கிராம சேவையாளர் மூலம் அதனை அத்தாட்சிப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டதைப் பிரதிவாதியும் ஏற்றுக் கொள்ளவே சகல ஒழுங்குகளையும்செய்து கொண்டு வருமாறு கூறிய நீதிபதி, வழக்கை அக்டோபர் 16-ம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

— —

## புதுவருட நிர்வாகிகள்

கொழும்பு, புதன்

அஞ்சல் தொலைதொடர்புச் சேவையாளர் சங்கத்தின் நடப்புவருட உத்தியோகத்தராகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: வில்பிரட் பெரேரா. செயலாளர்: வி. யோசப் துணைச்செயலாளர்கள்: ச சேதுகாவலர், ப. பொன்னையா. பத்திராதிபர்கள்: க. குகதாசன் 'போஸ்மாக', அ. குணபாலசிங்கம், க. கனகசுந்தரம்.

0 0 0

உடுப்பிட்டி, புதன்

வதிரி பூவற்கரைப் பிள்ளையார் ஆலய பரிபாலனசபையின் 13-வது வருடாந்தப் பொதுக் கூட்டம் திரு. ஆ. ம. செல்வத்துரை தலைமையில் நடைபெற்றது.

பரிபாலன சபை நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர். திரு. சி. க சரவணமுத்து, உப தலைவர்: திரு. அ. மகாதேவன், செயலாளர்: ...

# "குமாரசுவாமிப் புலவருக்கு சுன்னுகத்தில்சிலைவேண்டும்"

## பாராட்டுக் கூட்டத்தில் இளைப்பாறிய மாவட்ட நீதிபதி

உடுவில், புதன்

"இந்த நாட்டிலே தமிழ் மொழியை வளர்த்தவர்கள் பலர். ஆறுமுகநாவலர் குமாரசாமிப்புலவர் முதலியோர் அவர்களுள்தலையானவர்கள். ஆறுமுகநாவலர் புகழ் நிலைக்கும்வரை குமாரசாமிப்புலவரின் புகழும் நிலைக்கும். நாவலருக்கு நல்லூரில் சிலை நிறுவியதுபோல குமாரசாமிப்புலவருக்கு சுன்னுகத்தில் சிலை நிறுவ வேண்டும்".

சமாதான நீதவான் உத்தியோகப்பற்றற்ற நீதவான் ஆகியபட்டங்களை அரசாங்கத்திடமிருந்து அண்மையில் பெற்றநியாயதுரந்தரர்திரு. தம்பிப்பிள்ளை தம்பிரத்தினத்திற்கு சுன்னுகம்மக்களால் அளிக்கப்பட்ட உபசரணை விழாவுக்குத்தலைமைவகித்து பேசிய முன்னுள் பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திரு. வி. எம். குமாரசாமி மேற்கண்டவாறு கூறிஞர்.

காங்கேசன்துறைவீதி-ஐயனுர் கோவில் வீதிச்சந்தியிலிருந்துமேளவாத்தியத்துடன் திரு. த தம்பிரத்தினம் சுன்னுகம் கதிரமலை சிவன் கோவில்வரை ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார்.

உடுவில் தொகுதி ஆட்சி மன்ற உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம், திரு. தம்பிரத்தினத்தைப்பாராட்டி பேசுகையில் அவருக்கு தகுந்த பட்டம்வழங்கிய அரசாங்கத்தை நாம் பாராட்ட வேண்டும் என்ருர் முன்னுள் ஸ்கந்தவரோதயாக்கல்லூரி அதிபர் திரு வி. சிவசுப்பிரமணியம் பேசுகையில், தமிழ்ப்பிள்ளைகளை பொறுத்தவரை பல்கலைக்கழகப்படிப்பு மிகவும் கஷ்டமான தொன்ருக இருப்பதாகவும், விரைவில் கிடைக்க இருப்பதாகக் கூறப்படும் பல்கலைக்கழகம் கூட நம்மிடையே உள்ள போட்டி பூசல்களால் கிடைக்காதுபோய்விடலாம் என்றும், அப்படி ஒரு நிலை உருவாகாது, ஒருபல்கலை கழகத்தை தமிழர்களுக்கென அமைத்துக் கொள்வதில் நாம் ஒன்றுபடவேண்டுமென்றும் சொன்னுர்.

சுன்னுகம் பட்டினசபைத் தலைவர் திரு. பொ. நாகலிங்கம், இளைப்பாறிய அதிபர் திரு. கு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை, நியாயதுரந்தரர் திரு. ஆர். என் சிவப்பிரகாசம், திரு. ரி சிவலிங்கம், ஜே. பி ஆகியோரும் புதிய சமாதான நீதிபதியை பாரட்டிப் பேசினர்.

# "விவாகம் என்பது கடையில் வாங்கும் வளையல் அல்ல"

## ஜீவனும்சவழக்கில் நீதிபதி புத்திமதி

மட்டுவில், புதன்

'கட்டிய கணவன் அமெரிக்காவிற்கு அழைத்தாலும் அங்கு போய் ஒத்து வாழ வேண்டியது மனைவியின் கடமை. கல்யாணம் என்பது கடையில் வாங்கும் கண்ணுடி வளையல் அல்ல, நினைத்த நேரம் முறித்தெறிந்துவிட்டுப் புதியது வாங்கிக்கொள்ள. ஒற்றுமையாக வாழவேண்டியது இருவரின் கடமையாதலால் ஒற்றுமையாகப் போங்கள்.'

இவ்வாறு விவாகரத்துக் கோரி நீதிமன்றத்திற்கு வந்த இளம் ஜோடியைப் பார்த்து சாவகச்சேரி மாவட்ட நீதவான் திரு. ஸி. எம். தருமலிங்கம் மேற்கண்டவாறு புத்திமதி கூறிஞர்.

கச்சாயைச் சேர்ந்த வல்லிபுரம் முத்துத்தம்பி என்பவர் யாழ்ப்பாணத்தை சேர்ந்த தனது மனைவி மனேன்மணி மீது விவாகரத்துக்கோரி வழக்கொன்றைத் தாக்கல் செய்யதிருந்தார். இவ்வழக்கு சாவகச்சேரி மாவட்ட நீதவான் திரு. ஸி. எம். தருமலிங்கம் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டது.

தனது வீட்டில்வந்து குடித்தனம் நடத்த கணவர் மறுக்கிருர் என்றும் கணவரைத் தமக்கு வேண்டும் என்றும் மனைவிநீதிபதியிடம் தெரிவித்தார். கணவர் மீது ஏற்கனவே ஜீவனும்ச வழக்குத் தொடர்ந்து மாஜிஸ்திரேட் ...

## ஆக 6 பேர் மட்டும்தானும்

கோப்பாய், புதன்

தேசிய வாலிபர் சேவைத் திட்டத்தின் கீழ் வேலை அபிவிருத்திக்கென படித்த வாலிபர்களைச் சேர்க்கும் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்குதல்களில் இது பெரியது என்றும் ஆனால் ஆள் நஷ்டம் ஒன்றும் ஏற்படவில்லையென்றும் கூறினார்கள்.

— —

## ''பொருளாதார வளம வளர...''

மட்டுவில், புதன்

''நமது தொகுதியின் மத்தியிலே ஆங்காங்கே, விவசாயக் கல்வி நிலையங்களையும், பொறியியல் பயிற்சி நிலையங்களையும் நிறுவுவதன் மூலமே எமது எதிர்கால இளைஞர்களுக்குத்தக்க கல்வி புகட்டி அவர்களைத்தக்கபடி பயன்படுத்தி, எமது நாட்டின் பொருளாதார வளத்தை உயர்த்த வேண்டும்'' என சாவகச்சேரி முன்னாள் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வே. குமாரசாமி, கச்சாயில், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணிக்கிளை அங்குரார்ப்பணம் செய்யுமுகமாகக் கூடிய கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார். திரு. நாகேந்திரம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

வழக்கறிஞர் திரு. எஸ். பி. மயில்வாகனம், செல்வன் ஆர். டி. இராஜகுலேந்திரன் உட்பட பலர் உரைநிகழ்த்தினர்.

கல்லூரி ஆசிரியர்களால் பிரிவுபசாரமும், இராப்போஷன விருந்தும் அளிக்கப்பட்டது.

கல்லூரியின் உப-அதிபரான றெபேர்ட் நவரத்தினம் வைபவத்திற்குத் தலைமை வகித்தார்.

பிரதம தலைமை ஆசிரியரான திரு. ஆறுமுகம்மற்றும் ஆசிரியர்கள் திரு. முருகேசு, திருமதி இராஜேஸ்வரன் ஆகியோரும் பேசினார்கள். ஆசிரியர்கள் சார்பில் திருமதி அரியரத்தினம் அன்பளிப்பு வழங்கினார்.

## கடத்தியதாக புகார்

உடுப்பிட்டி, புதன்

மூத்த சகோதரியுடன் தங்கியிருந்த தனது சகோதரி தம்பையன் தவமணியை (15 வயது) தமையன் இன்னுமொருவரின் உதவியுடன் கடத்திச் சென்றுவிட்டதாக, கரணவாய் தெற்கு, சித்தம்பாதி என்னுமிடத்தைச் சேர்ந்த சிவபாக்கியம் திரவியம் பருத்தித்துறைப் பொலிஸில் புகார்செய்துள்ளார்.

இதுசம்பந்தமாகத் தவமணியின் சகோதரன் தாமோதரம்பிள்ளை ஒட்டுசுட்டானைச் சேர்ந்த செல்லையா சண்முகம் ஆகிய இருவரைப் பொலிஸார் தேடி வருவதாகவும் அறியப்படுகிறது.

...சுவாமியார் குறிப்பிட்டார்.

இரண்டுநாட்களாக நடைபெற்ற இக்கண்காட்சியில் பாடசாலை மாணவ மாணவியர் அதிக பங்குகொண்டனர். மாலையில் ஒரு கூட்டமும் நடைபெற்றது.

— —

## ச. ச. நிலையம் தீர்மானம்

கோப்பாய், புதன்

''பஸ் பிரயாணிகளின் நலனைக் கருத்திற்கொண்டு பருத்தித்துறை பஸ் டிப்போவினால் மீண்டும் பழைய நேரசூசியை அமுல்செய்க'' என சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கோரி கோப்பாய் சூரியோதய சனசமூகநிலையம் அதன் 26-வது வருடாந்தக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாக தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர் திரு. கே. செல்லையா உபதலைவர் திரு. ஆர். கோபாலசிங்கம், செயலாளர்: திரு. என். கந்தசாமி, உபசெயலாளர் திரு. வி. கந்தையா, பொருளாளர்: திரு. வி. தம்பிராசா, நிலையப் பொறுப்பாளர், திரு. ஆர். கோபாலசிங்கம்.

மூதர் அடங்கிய செயற்குழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

— —

## 'இ. தி. மு. க. வை ஒழிக்கவேண்டும்'

நுவரெலியா, புதன்

'சிங்களத் தலைவர்களின் பலவீனத்தை அறிந்த இ. தி. மு. க. தலைவர்கள் நாட்டிலுள்ள மற்றும் சிங்கள எதிர்ப்பியக்கத்தினரோடு சேர்ந்து நாட்டில் பெரும் குழப்பத்தை உண்டுபண்ண முயற்சிக்கின்றனர். சமீபத்தில் யாழ். நகரில் நடைபெற்ற இ. தி. மு. க. மகா நாட்டின் சொற்பொழிவுகளிலிருந்து இது வெளிப்படையாகத் தெரிகிறது, எனவே எல்லோரும் ஒன்றுசேர்ந்துஇ தி மு. கவை எதிர்க்க வேண்டும்' என 'எக்சத் சிங்கள பெரமுன' வின் காரியதரிசி திரு. திலக் ஆர். மிரான்டோ கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: 'நாட்டில் அமைதி நிலவவேண்டுமென விரும்பும் சிங்கள மக்கள் எல்லோரும் சிங்கள அரசியல் தலைவர்கள் ஒன்றுபடவேண்டுமென விரும்புகிறார்கள். ஆனால் இத் தலைவர்கள் எல்லோரும் அரசியல் அதிகாரத்தையும் பதவிகளையும் விரும்புவதால் ஒன்றுபடுகிறார்களில்லை' எனக் குறிப்பிட்டார்,

...றது. இந்த ஒரே ஒரு பஸ் சேவைதான் இப்படியான பல கிராமங்களின், அரசாங்க, தனியார்துறை உத்தியோகத்தர்களுக்கும், ஆசிரியர், மாணவர்களுக்கும் கை கொடுத்து உதவுகிறது.

இதே வேளையில், இதை நம்பிய இவர்களை பல சந்தர்ப்பங்களில் இந்தப் பஸ் சேவை காலைவாரிவிடும்நிலையையும் உருவாக்கியவண்ணம் இருக்கிறது இந்த பஸ் சேவையை நம்பிய இவர்கள், இதற்காககாத்துநின்று, ஏமாறும் பட்சத்தில் வேறு பஸ் பிடிப்பதற்கு சுமார் 3 முதல் 5 மைமில் தூரம் நடந்து செல்ல வேண்டி ஏற்படும். இதனால் நேரம் அடாத்தாகவே, இவர்கள் வீடு திரும்ப வேண்டியதைத் தவிர வேறு வழி இல்லை. இதனால் அவர்கள் பாதிக்கப்படுகிறார்கள்''. என்றும் மகஜரில் கூறப்பட்டுள்ளது.

## மனைவியைக் கத்தியால் வெட்டினாராம்

### 9 மாதம் சிறைவாசம்

வல்வெட்டித்துறை, புதன்

நாகர்கோவிலைச் சேர்ந்த சின்னத்தம்பி கந்தையா என்பவர் தமது மனைவி பராசக்திக்கு கத்தியால் வெட்டி படுகாயம் விளைவித்ததாகப் பருத்தித்துறைப் பொலிசாரால் குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின் பின்னர் மாஜிஸ்திரேட் எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு பல வழக்குகளில் அவருக்கு தண்டனை விதிக்கப்பட்டிருப்பதாகச் சுட்டிக் காட்டினார்.

எதிரி அக்குற்றச்சாட்டுக்களை ஒப்புக் கொள்ளவே இவ்வழக்கிற்காக 9 மாதச் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

— —

## ''கன்னங்கராவின் பெயர் சூட்டுக''

கோட்டை, புதன்

கொழும்பு றோயல் கல்லூரியின் பெயரை மாற்றியமைக்கும்படி கல்வி அமைச்சரிடம் கேட்கப்பட்டுள்ளது.

காலஞ்சென்ற முன்னாள் கல்வி அமைச்சர் திரு. சி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கராவின் ஞாபகார்த்தமாக இக்கல்லூரியை 'கன்னங்கரா மகாவித்தியாலயம்' என அழைக்கப்படவேண்டுமென அமைச்சிடம் கேட்கப்பட்டுள்ளது.

...ர்னி ஜெனரலிடம் சமர்ப்பித்துள்ளார்.

— —

## 'காந்தி கிராமம்' இலவச வெளியீடு

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் மில்க்வைற் சோப் ஸ்தாபனத்தார் காந்தி நூற்றாண்டுவிழாவை முன்னிட்டு 'காந்திகிராமம்' என்னும் காந்தி கிராமச் செய்திகள் ஒன்றையும் காந்தி இசைமாலையையும் வெளியிட்டு இலவசமாக வழங்குகின்றனர்.

புலவர் நா. சிவபாதசுந்தரனார் மகாத்மாகாந்தி எழுதிய ஆச்சிரம வரலாறு என்னும் நூலைத் துணைகொண்டு மேற்படி நூலை ஆக்கியுள்ளார்.

கோப்பாய்

## கி. ச. தலைவர் எச்சரிக்கை

கோப்பாய், புதன்

கடந்த 62 ம் ஆண்டு முதல் இதுவரை சோலைவரி நிலுவை செலுத்தத் தவறியவர்கள் மீது உடன் நடவடிக்கை எடுக்க முன்வந்துள்ளார் கோப்பாய்க்கிராம சபைத் தலைவர் திரு. பரமானந்தராசா.

அக்டோபர் 1-ம் திகதி முதல் மேற்குறிப்பிட்டவர்களின் வீடுகளிலுள்ள அசைவுள்ள பொருட்கள் யாவும் பகிரங்க ஏலத்தில் விற்கப்படுமென அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## திருநாள்

பண்டத்தரிப்பு, புதன்

இளவாலை புனிதயாகப்பர் தேவாலயத்தில் செபமாலை மாதா திருநாளுக்கான நவ நாட்கள் ஆரம்பமாகியுள்ளன. 5-ம் திகதி யாழ். துணை மேற்றிராணியாரின் திருநாட் பூசையுடன் திருநாள் முடிவடையும்.

— —

## இலவச கண் சிகிச்சை

சித்தன்கேணி, புதன்

ஆனைக்கோட்டை கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் இம்மாதம் 3ந் திகதி வைத்திய கலாநிதி திரு. எஸ். ஆனந்தராஜன், ஆனைக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த கண் நோயாளர்களுக்கு, இலவச கண்சிகிச்சையும், கண் நோய் சம்பந்தமான இலவச ஆலோசனையும் வழங்கவிருக்கிறார்.

ஆனைக்கோட்டை கிராம முன்னேற்றச் சங்கம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

பொதுக் கூட்டம் திரு. ஆ. ம. செல்வத்துரை தலைமையில் நடைபெற்றது.

பரிபாலன சபை நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர். திரு. சி. க. சரவணமுத்து, உப தலைவர்: திரு. அ. மகாதேவன், செயலாளர்: திரு. சி. க. இராசேந்திரன், பொருளாளர்: திரு. மூ. ம. சுப்பிரமணியம். கோவில் மனேஜர் திரு. சி. சிமாரிமுத்து. பத்துப்பேரடங்கிய நிர்வாகசபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

0 0 0

உடுவில், புதன்

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் மாணவ மன்றக்கூட்டம் திரு தருமர் சித்தார்த்தன் தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்- செல்வன் ஆ கோடீஸ்வரன், உபதலைவர்- செல்வன் க துரைசிங்கம், பொதுச் செயலாளர் செல்வன் அ சர்வானந்தன், உதவிச் செயலாளர்- செல்வன் சி தெய்வேந்திரம், பொருளாளர் செல்வன் சி கஜேந்திரா.

நிர்வாகசபை அங்கத்தினர் 8 பேரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

— —

## தடுப்பு மருந்து விநியோகம்

மட்டுவில், புதன்

சாவகச்சேரிப் பகுதியில் உள்ள சகல வீடுகளுக்கும் இளம்பிள்ளை வாத நோய்த் தடுப்பு மருந்து விநியோகிக்கப்பட்டுவருகிறது. சுமார் இரண்டு மாத காலம்வரை மருந்து விநியோகிக்கப்படும்.

0 0 0

கோப்பாய், புதன்

கோப்பாய் சுகாதாரப் பகுதியினர் இங்குள்ள வீடுகள் தோறும் இளம் பிள்ளை வாதத் தடுப்பு மருந்து விநியோகித்துவருகின்றனர். தற்போது இப்பகுதியில் மேற்படி நோய் பரவலாமென்ற அச்சம் பொதுமக்கள் மத்தியில் நீங்கிவருகிறது.

0 0 0

அராலி, புதன்

அரசாங்க சௌக்கியப் பகுதியினர் அராலிப் பகுதியில் வீடுகள் தோறும் சென்று ஐந்து வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கு இளம்பிள்ளை வாதத் தடுப்பு மருந்து கொடுத்துவருகிறார்கள். சிறுவர்களுக்கு இதற்கென வாயினால் அருந்தும் உள் ஊட்ட மருந்து வழங்கப்பட்டுவருகிறது.

## ஆக 6 பேர் மட்டும்தானும்

கோப்பாய், புதன்

தேசிய வாலிபர் சேவைத் திட்டத்தின் கீழ் வேலை அபிவிருத்திக்கென படித்த வாலிபர்களைச் சேர்க்கும் முயற்சி வலி. கிழக்குப் பகுதியில் கோப்பாய், அச்சுவேலி, பத்தமேனி ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் சேவையாற்ற கோப்பாயில் 500 க்கு மேற்பட்ட வாலிபர்களைத் தாம் எதிர்பார்த்ததாகவும் ஆனால் ஆறு வாலிபரே முன்வந்துள்வார்களெனவும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் கவலையுடன் தெரிவித்தார்.

—

## உபசபாநாயகர் முயற்சி

வல்வெட்டித்துறை, புதன்

உபசபாநாயகர் திரு. எம். சிவசிதம்பரம் வடமராட்சிப் பகுதிக்கான மத்திய பஸ் நிலையம் ஒன்றை நெல்லியடியில் அமைப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

## ஏழாலை வடக்கு ச. ச. நிலையத்தினர் முயற்சி

ஏழாலை, புதன்

ஏழாலை வடக்கு கலாநிதி சனசமூகத்தைச் சேர்ந்த உறுப்பினர்களால் திருத்தியமைக்கப்பட்ட கலாநிதி வீதி திறப்பு விழாவை சிறப்பாக நடத்த மேற்படி சனசமூக நிலையத்தினர் முயற்சி மேற்கொண்டுள்ளனர். அன்று கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறவிருக்கின்றன.

— —

## பாராட்டு

சுழிபுரம், புதன்

பண்டத்தரிப்பு பட்டின சபையின் ஏழாவது வட்டார அங்கத்தவர் த. தம்பித்துரை அரசினரால் புதிய சமாதான நீதிபதியாக நியமிக்கப்பட்டதைப்பாராட்டி தேநீர் விருந்தொன்று பட்டினசபை தலைவர் திரு. ஆர். செல்வரத்தினத்தால் அளிக்கப்பட்டது. பலர் பாராட்டுரை வழங்கினர்.

## பிரியாவிடை

சுழிபுரம், புதன்

பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் கல்விகற்பித்து கொழும்புக்கு இடம்மாற்றப்பட்ட திரு. க. தவராசாவுக்கு வித்தியாலயத்தலைமை ஆசிரியர் திரு. செ. ஸ்ரீநிவாசன் தலைமையில் ஒரு பிரியாவிடை அளிக்கப்பட்டது.

...டது.

தனது வீட்டில் வந்து குடித்தனம் நடத்த கணவர் மறுக்கிறார் என்றும் கணவரைத் தமக்கு வேண்டும் என்றும் மனைவிநீதிபதியிடம் தெரிவித்தார். கணவர் மீது ஏற்கனவே ஜீவனாம்ச வழக்குத் தொடர்ந்து மாஜிஸ்திரேட் மாதம் 30 ரூபா ஜீவனாம்சம் கட்ட வேண்டும் என்று தீர்ப்பளித்திருந்ததாகவும் இருவரும் காதல் விவாகம் செய்துகொண்டதாகவும் இளம்பெண் மேலும் தெரிவித்தார். இவர்களுக்கு இரண்டு குழந்தைகள் இருப்பதாகவும் கோர்ட்டில் தெரிவிக்கப்பட்டது.

பெண்ணின் கணவர் வ. முத்துத்தம்பி தமது முறைப்பாட்டின் போது, தனது மனைவி தன்னுடன் வந்திருந்து வாழ்க்கை நடத்த மறுக்கிறார் என்றும் இதனால் இவருடைய தொடர்பை துண்டித்து வேறு விவாகம்செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

வேறு மணம் செய்வதற்காகத்தான் இந்த விவாகரத்தைக் கோருகிறீர் என்று கணவனைப் பார்த்து நீதிபதி கேட்டபோது அவர் 'ஆம்' எனப்பதிலளித்தார்.

நினைத்தபடிஒரு பெண்ணை காதலித்து கல்யாணம் செய்வதும் பின் வேண்டாத நேரத்தில் உதறித்தள்ளுவதும் ஆண்களுக்கு அழகுமல்ல நீதியுமல்ல என்று புத்திமதி கூறிய நீதிபதி இருவரையும் ஒற்றுமையாகப் போகும்படி கூறி மீண்டும் இருவரையும் இம்மாதம் 30-ம் திகதி கோர்ட்டுக் குவரும்படியும் தெரிவித்தார்.

## உற்சவமும் கதாகாலக்ஷேபமும்

மாத்தளை, புதன்

மாத்தளை ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலயத்தில் கோவில் கொண்டுள்ள ஸ்ரீதேவி, பூதேவி சமேத ஸ்ரீமத் நாராயண மூர்த்திக்கு இம்மாதம் 2-ம் திகதி தொடக்கம் 11-ம் திகதிவரை பத்து நாட்களுக்கு உற்சவம் நடைபெறவுள்ளது.

இவ்வுற்சவத்தை யொட்டி தினமும் விசேஷ அபிஷேகம் பூசை, திருவிழா என்பன சிறப்பாக நடைபெறும்.

தினமும் ஆலயத்தில் மாலை 6-30 மணி முதல் 8-30 வரை மதுரை ஆதீனக்கிளை நல்லைஞான சம்பந்தர் ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் ஸ்வாமிகளால் இராமாயணப் பிரசங்கம் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

சீன-சோவியத் நட்பு

## தகராறுகளை பேச்சு மூலம் தீர்த்துக்கொள்ள அழைப்பு

ஹாங்காங், அக். 1

கம்யூனிஸ்ட் சீனாவின் 20-வது குடியரசு தினத்தையொட்டி சோவியத் யூனியன் சீனத்தலைவர்களுக்கு அனுப்பியுள்ள வாழ்த்துச்செய்தியில் எல்லைத் தகராறுகளை சண்டை மூலமல்லாமல் சமரசப் பேச்சுவார்த்தைகளினால் தீர்த்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கின்றது. சீனக்குடியரசு தினத்தையொட்டி சீனமக்களுக்கும் தலைவர்களுக்கும் சோவியத்யூனியன் வாழ்த்துக்களைத் தெரிவித்திருக்கின்றது

சீனக்குடியரசில் அதிகார பூர்வமானபத்திரிகைகள் வெளியிட்டிருக்கும் செய்திகளில் சீன சோவியத் தகராறுகளை பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்துக் கொள்ளவே விரும்புகிறோம். ஆனால் அணு ஆயுதப் பயமுறுத்தலுக்கு அசைந்து கொடுக்கமாட்டோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இசைத்தமிழ் மன்றத்தின் தமிழிசைப் பெருவிழா

யாழ்ப்பாணம், வியாழ்.

அண்ணாமலைஇசைத் தமிழ் மன்றத்தின் பத்தாவது ஆண்டு நிறைவுத் தமிழிசைவிழா நேற்று ஆரம்பமாகியுள்ளது. நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்து முன்றலில் நடைபெறும்இவ் விழா 7 நாட்களுள்தொடர்ந்து நடைபெறும்.

மேற்படி சங்க விழாவின் இரண்டாம் நாளான இன்று இசைக்கல்லூரி மாணவ மாணவிகள், செல்வி நவமணி நாகலிங்கம், திரு விஜயவீரசிங்கம், திரு வி கே நடராஜன் ஆகியோரது இன்னிசைக் கச்சேரிகள் நடைபெறுகின்றன இன்றைய நிகழ்ச்சிகளுக்கு திரு எஸ் ஏ செந்தில்நாதன் தலைமை தாங்குவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

உடலுக்கு இன்றியமையாதது மதுபானமல்ல, மாமிசபோசனமல்ல, புகையிலை அல்ல. தூய தாவர போசனம் ஆன்மாவுக்கு இன்றியமையாத உணவு பிரார்த்தனை. — மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna
Post Box: 49, Jaffna. Telephone: 889

யாழ்ப்பாணம், சௌமிய வருஷம் புரட்டாதி மாதம் 16-ந் திகதி (2-10-69)


## இன்று மகாத்மாபிறந்து ஒரு நூற்றாண்டு முடிகின்றது

# இரத்த ஆறு ஓடிய நவகாளிக்கு மகாத்மாவின் அன்பு யாத்திரை

**நவகாளியில்ஏற்பட்ட இரத்தக்களறி, மகாத்மாவின் அகிம்சைத் தத்துவத்துக்கே மாபெரும் சோதனையாக அமைந்தது. அபாயம் நிறைந்த அந்தப்பகுதிக்கு அண்ணல் மேற்கொண்ட பாதயாத்திரையின்போது அங்கு நேரில் சென்று பார்த்த பத்திரிகையாளர் நாராயணராவ் குல்கர்னி மகாத்மாவுடன் தமக்கு ஏற்பட்ட அனுபவங்களை உருக்கமாக வருணிக்கிறார். தமிழாக்கம்-'பேனு'**

## காந்தி நூற்றாண்டு விழா

காந்திமகான் பிறந்த தினம் இன்று. அவர் இன்று உயிருடனில்லையாயினும் அவர் அவதரித்த நூற்றாண்டு தினத்தை உலகமே கொண்டாடுகிறது. மகான்கள், மேதைகள் அடிக்கடி தோன்றுவதில்லை. ஆயிரம் ஆண்டுகளுக்கொரு தடவை தான் அவர்கள் அவதரிக்கிறார்களென்பது ஐதீகம். அந்தப் பெருமக்களின் நினைவுதினங்களைக் கொண்டாடுவதன் மூலம் இன்றைய சந்ததியினரும் நாளைய சந்ததியினரும் ஒரு சிறிதளவாவது அவர்கள் வாழ்ந்துகாட்டிய வழியில் செல்லவும் அவர்களின் போதனைகளைப் பின்பற்றி வாழ முயற்சிக்க வழிகாட்ட வேண்டுமென்பதுதான் நோக்கம். காந்தி நூற்றுண்டு ஜயந்திவிழாவில் கலந்துகொள்வதற்காக இந்தியா வந்துள்ள எல்லைக் காந்தி கான் அப்துல் கபார் கான், சொல்லியிருக்கும் ஒரு வார்த்தை காந்திஜயந்தி கொண்டாடப்படும் நாடுகளிலும் காந்தி பிறந்த இந்திய நாட்டிலும் மக்கள் நினைவில் வைத்து ஆத்மசோதனை செய்யவேண்டும். "காந்திஜி மறைந்தவுடன் காந்திஜியின் போதனைகளையும் மக்கள் மறந்துவிட்டனர்." என்பதுதான் அந்த வார்த்தை சரியாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார். யாரும் மறுக்க முடியாது.

அகிம்சாமூர்த்தி, கத்தியின்றிஇரத்தமின்றி விடுதலை வாங்கித் தந்த பெம்மான், தேசிய ஒருமைப்பாட்டின் சிற்பி, தாழ்வுற்று வறுமை மிஞ்சி பாழ்பட்டு நின்ற மக்களை வாழ்விக்கவந்த அண்ணல் என்றெல்லாம் காந்திமகானுக்கு முத்திரை குத்தினுல் மட்டும் போதாது அவர் போதித்த, வாழ்ந்து காட்டிய வழிகளை ஓரளவாவது பின்பற்றுவதில்தான் அவரது ஆத்மா சாந்தியடைய முடியும். அவரது விழாவைக் கொண்டாடுவதிலும் அர்த்தமிருக்கிறது.

இந்தியா சுதந்திரம்பெற்

பலாத்காரமே கூடாதென்றும் எந்தப் பிரச்னைக்கும் பலாத்காரத்தின் மூலம் தீர்வுகாண முடியாதென்றும் சாத்வீக வழியே சிறந்த மார்க்கமென்றும் உலகுக்குப் போதித்தும் வழிகாட்டியும் வந்த காந்திமகான் பிறந்தநாட்டில் எந்தப் பிரச்னைக்கும் ஆர்ப்பாட்டமும், தீ, கொள்ளை முதலிய வன்முறைச் சம்பவங்களும் மலிந்துபோயிருக்கின்றன,

தீண்டாமை ஒழிப்பையே தமது முக்கிய பணியாகக் கொண்ட காந்திமகான் தாழ்த்தப்பட்ட மக்களெல்லோரும் கடவுளின் குழந்தைகள் என்ற முறையில் 'ஹரிஜனர்,என்று அழைத்து அவர்களுக்கு வாழ்வளித்த நாட்டில் இன்னும் தீண்டாமைக் கொடுமை முற்றாக நீங்கவில்லை.

இது இந்தியாவில் உள்ள நிலை. இவற்றைக் காந்தி ஜெயந்தி நூற்றுண்டுவிழாக் கொண்டாடும் இச்சமயத்திலாவது இந்திய மக்கள் உணர்ந்து தங்கள் தவறைத் திருத்தி பிறருக்கும் வழி காட்டவேண்டும்.

காந்திஜியின் விடுதலைப் போராட்டம்தான் இலங்கை உட்பட ஆசியநாடுகள் பலவும் விடுதலைபெறுவதற்கு காரணமாயிருந்தது. எனவே காந்திஜி விடுதலை தேடிக்கொடுத்த இந்திய நாடு அந்த விடுதலையை சுதந்திரத்தைப் பேணிக்காப் பதில்தான் இதர நாடுகளின் சுதந்திரமும் பெரிதும் தங்கியிருக்கிறது.

காந்திஜி கொலைகாரனின் துப்பாக்கிக் குண்டுகளுக்குப் பலியானுர் என்ற செய்தி கேட்டவுடனே யாழ்ப்பாணப் பகுதியில் கண்ணீர் விட்டுக் கதறியழுதவர்களும் காந்தி மகானின் உருவப்படத்தை ஊர்வலமாகக் கொண்டு திரிந்து அனுதாபக்கூட்டங்கள் நடத்தியவர்களும் பலர். இலங்கையின் சுதந்திரதினம் கூட 1948-ம் ஆண்டு பெப்ர மாதம் யாழ்ப்பாணத்தில் கொண்டாடப்படாமல் காந்தி மகானின் மறைவுக்காகத்துக்

"மகாத்மாவின் எல்லா சோதனைகளிலும், நவகாளி யாத்திரைதான் மகத்தானது அங்கேதான், நாம் அன்பு வழியைப் பின்பற்றவேண்டுமேயொழிய பழிவாங்கும் போக்கைக் கடைப்பிடிக்கக் கூடாது என்பதை அவர் எடுத்துக்காட்டினுர்" இவ்வாறு திரு. சி. ராஜகோபாலாச்சாரியார் கூறியிருந்தார்.

'மகாத்மாவின் நவகாளி பணிகள் அவரது நடவடிக்கைகளுக்கெல்லாம் சிகரமாக அமைந்தன. அன்புதான் வெற்றிகொள்ளும், பகை துன்பத்தையும் துரதிருஷ்டத்தையும் தான் கொண்டுவரும் என்ற தத்துவத்துக்கமைய அவர் வாழ்ந்துகாட்டினுர்.'

ராஜாஜியின் இந்தக் கருத்தை நான்பத்திரிகையில்படித்தேன், அதன்பேரில் நவகாளிக்குப்போய் மகாத்மாமேற்கொண்டிருக்கும் மகத்தான பணியை நேரில் பார்ப்பதென்று முடிவு செய்தேன். கல்கத்தாவில் இருந்தவர்கள் குறிப்பாக நவகாளி அமைதிப்பணிகளுக்குப் பொறுப்பாய் இருந்தவர்கள் நான் அங்கு போவதைவிரும்பவில்லை. அபாயம் நிறைந்த அந்த நீண்ட பயணத்தை நான் மேற்கொள்வது புத்திசாலித்தனமல்லவென்று கூறித்தடுத்தார்கள். அது குழப்பம் நிறைந்த பகுதி என்பது மட்டுமல்ல, காட்டு மிருகங்களும், நச்சுப்பாம்புகளும் நிறைந்த பகுதி என்பதும்தான் காரணம்.

### மகாத்மா விரும்பமாட்டார்

மகாத்மா யாரும் தன்னை வந்து பார்ப்பதை விசேஷமாக தூர இடங்களில் இருந்துவருவதை விரும்பமாட்டார் என்றும் அவர்கள் கூறினுர்கள். பாபு தன்னைத்தனிமையில் விட்டுவிடும்படியும், தனது பெரிய சோதனையில் எவரும் குறுக்கிடவிடவேண்

கொண்டு வந்துள்ள அவர் அந்தப்பணத்தை நவகாளியில் அல்லற்படும் மக்களுக்காக அனுப்பியிருந்தால் அல்லது ஹரிஜன நிதிக்கு சேர்த்திருந்தால் நல்லதாய் இருந்திருக்கும்' என்று பாபு கூறியிருக்கிறுர்.

மகாத்மாவின் பாதயாத்திரையின்போது நவகாளிக்கு மற்றவர்கள் வருவது உள்ளூர் மக்கள் மத்தியில் குறிப்பாக முஸ்லிம்கள் மத்தியில் அவநம்பிக்கையை ஏற்படுத்தும் என்று அவர் வேதனைப்படுவதாக பேராசிரியர் போஸ் என்னிடம் மேலும் கூறினுர். என்னைப்போல பலர் வந்து கருணைகாட்டாமல் திருப்பியனுப்பப்பட்டுள்ளனர். நான் மீண்டும் அந்த மரத்தடிக்குத் திரும்பினேன்.

அன்று மாலை 5 மணியளவில் பேராசிரியர் போஸ் என்னை அழைத்து அன்றைய பிரார்த்தனை பகிரங்கமாக நடைபெறுவதால் நானும் கலந்துகொள்ளலாம் என்றும் அன்றைய இரவை ஸ்ரீநகரில் கழிக்க அனுமதிக்கப்படமாட்டேன் என்பதால் பக்




நவகாளியில் அவருடன் நான் நேரடியாகத் தொடர்புகொண்ட முதல் சந்தர்ப்பம்.

### அவசியமா?

நான் அங்கு வந்தது அவசியந்தானு என்றும் அந்தப் பிரயாணத்துக்கு நான் ஏன் அவ்வளவு பணம் செலவழித்தேன் என்றும் வினவினுர். எனது பிரயாணத்துக்கான நியாயம் ஒன்றையும் காணமுடியாததால் அவர் கேள்விகளுக்குச் சரியான பதில்கொடுக்க என்னுல் முடியவில்லை நான் பணிந்து, மன்னிக்கும்படியும், ஆசீர்வதிக்கும்படியும் வேண்டிக்கொண்டேன்.

பாபு யாத்திரையைத் தொடங்கிவிட்டார். அவர் ஒரு பர்லாங் தூரம் போகுமுன் நான் படமெடுப்பதில் ஆர்வம் கொண்டிருந்ததால் அவரிடமிருந்து தப்பிக்கொண்டேன்

இது ஸ்ரீநகரிலிருந்து தர்மாப்பூருக்குச் சென்ற யாத்திரை. சுமார் மூன்று மைல் தூரத்தை 100நிமிடங்களில் கடந்தோம். அது பிரதான

## "உயிருடன் திரும்பினுல் மறுபிறப்பு" என்றுர்

கத்திலுள்ள ஒரு கிராமத்தில் கழிக்கலாம் என்றும் கூறினுர்.

கூலியாளுக்கு [illegible] சாமான்களை மரத்தடியில் விட்டதாகக் காட்டிக்கொள் விடுத்துவிட்டு அன்றைய

மீதும் இருக்கும் நம்பிக்கையை மட்டுமின்றி தன்னையே மறப்பதுமாகும். [illegible] நம்பிக்கையை இழந்து வழிவிட ஒருவர் மூழ்கிப்

மாக ஒரு முஸ்லிம் கிராமம். வழி நெடுகிலும் பாபுஜி ஒரு டஸின் அலங்கார வளைவுகளுக்கு மேல் கடந்துசெல்ல வேண்டியிருந்தது. இளம் தளிர்களாலும், மலர்களா

னம் செய்தபடி கடிதங்களுக்குபதில்களையும் தமது சுருக்கெழுத்தாளரிடம் சொல்லத் தொடங்கிவிட்டார். அன்று காலை 11 மணிக்கு பேராசிரியர் போஸ் என்னை வரும்படி அழைத்திருந்தார் நான் 2 நாட்களாக சாப்பிடாமல்இருந்திருப்பதால், காந்தி முகாமிலேயே அன்றுஉணவு கொள்வதற்கு மகாத்மாவால் அனுமதிக்கப்பட்டிருப்பதாக மகிழ்ச்சியோடு அவர் என்னிடம் கூறினுர். கங்கை நதியின் கழிமுகமாகையால் அப்பகுதியில் கற்களைக்காண்பதே அரிதாகவிருந்தது. கற்களுக்கு பதில் பாக்குமரத் துண்டுகளே பெருவாரியாக பயன்படுத்தப்பட்டன.

மகாத்மா தங்கியிருந்த அறைக்கு அடுத்த அறையில் என்னுல் உணவு பரிமாறப்பட்டது. மகாத்மாவுக்குமனுவினுல் தயாரிக்கப்பட்ட உணவே எனக்குத் தரப்பட்டதால் நான் மகிழ்ச்சியடைந்தேன். 'ரேஷன்' உணவுப் பட்டியலில் இது சேர்க்கப்படவில்லை. அவித்த வாழைக்காய்களும், இரண்டு காட்டு அவரைக்காய்களும் எனக்குத் தரப்பட்டன. இது எனக்கு மகாபிரசாதமாக இருந்தது.

மகிழ்ச்சியோடு சுவைத்துச் சாப்பிட்டேன். இதோடு சோறும் சர்க்கரையும் தரப்பட்டது.

அடுத்தபிரார்த்தனைக் கூட்டத்தில் முன்போலவே பகவத்கீதையும் பஜனையும் இடம்பெற்றது. பிரார்த்தனைக்குப்பிறகு மகாத்மா பேசியபோது, நவகாளிக்கு எவரையும் புதிதாக வரவேண்டாமென்றும் அங்கு நிலவும் அமைதியை கெடுக்க வேண்டாமென்றும் மீண்டும் கேட்டுக்கொண்டார்,

1947 பெப்ரவரி 6ந்திகதி மகாத்மா பேசிய பேச்சை கட்சின் ஒரு பகுதி இது தான் பத்திரிகைகளில் அது பிரசுரமாகியிருந்தது.

'பத்திரிகைக்காரர்கள்முயற்சிகளில் ஈடுபடாமல் தன்

பாபுநிலைமையைப் புரிந்துகொண்டு என்னைப்பற்றியும் கர்நாடகத்தைப் பற்றியும் விசாரித்தார். அப்பொழுது நான் என்னிடமிருந்த மகாதேவ் தேசாயின கடிதமொன்றை அவர் கையில் வைத்தேன். அவரது மரணத்துக்குஇருமாதங்களுக்கு முன் 1942 ஜுலைமாதத்தில் எனக்கு எழுதப்பட்டது அக்கடிதம். அதை பாபு கவலை தோய்ந்த முகத்தோடுபார்த்தார். 'ஓ மகாதேவ்கடிதமா? தயவுசெய்து அவருக்கு நீர் என்ன எழுதினீர் என்பதை சொல்லும்' என்று கேட்டார். அந்தக் கடிதத்தை அவர் ஆர்வத்தோடு படித்தார்.

'அன்புள்ள நண்பரே, நீர் காந்திஜிக்கு எழுதிய கடிதம் சம்பந்தமாக, அவரிடமிருந்து ஏதாவது அபிப்பிராயத்தையோ, ஆசீர்வாதாதத்தையோ எதிர்பார்க்கவேண்டாம். உம்முடைய விஷயங்களை முதலில் மக்கள் முன்வையும், அவை விரும்பப்படுகின்றனவாவென்று பாரும் தகுதியான விஷயம் நிச்சயம் நீடித்து உயர்ந்து வாழும்'

### கையெழுத்து

கடிதம் மகாதேவின்சொந்தக் கையெழுத்தில் இருந்தது. அதனுல் பாபுவை அது மிகவும் உருக்கிவிட்டது. இந்தக் கடிதத்தில் கையெழுத்திட்டு தரும்படி ஐந்து ரூபா அவர்முன்வைத்தேன். அவர் இந்தியில் கையெழுத்திட்டார். ஆனுல் அவரிடம் ஆங்கிலத்தில் கையெழுத்து வாங்க நான் விடும்பினேன். பாபு ஆங்கிலத்தில் கையெழுத்துத் தருவதில்லையென்று எனக்குத் தெரியும். துணிச்சலை வரவழைத்துக்கொண்டு இந்தக்கடிதத்தில் ஆங்கிலத்தில் கையெழுத்திடும்படி ஐந்து ரூபாயை அவர் முன் வைத்தேன். மகாதேவின் கடிதம் ஆங்கிலத்திலிருந்ததால் இந்தியில் கையெழுத்திடுவது பொருந்தாது என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காந்திமகானுக்கு முத்திரை குத்தினால் மட்டும் போதாது அவர் போதித்த, வாழ்ந்து காட்டிய வழிகளை ஓரளவாவது பின்பற்றுவதில்தான் அவரது ஆத்மா சாந்தியடைய முடியும். அவரது விழாவைக் கொண்டாடுவதிலும் அர்த்தமிருக்கிறது.

இந்தியா சுதந்திரம்பெற்றதும் காங்கிரசைக் கலைத்துவிடவேண்டுமென்றுகாந்திஜி சொன்னார். அதைச் செய்ய தவறியதனால் இன்று காங்கிரஸ் மதிப்பிழந்து, செல்வாக்கிழந்து பிறர் எள்ளி நகையாடுமளவுக்கு சீர்குலைந்து நிற்கிறது.

இந்து - முஸ்லிம் ஒற்றுமைக்காக தேசிய ஒருமைப்பாட்டுக்காக தம் உயிரையே தியாகம்செய்த அண்ணல் காந்திஜி பிறந்த குஜராத் மாநிலத்திலேயே இனக்கலவரம் வெடித்துப் பல உயிர்கள் பலிகொள்ளப்பட்டிருக்கின்றன.

கதறியழுதவர்களும் காந்திமகானின் உருவப்படத்தை ஊர்வலமாகக் கொண்டு திரிந்து அனுதாபக்கூட்டங்கள் நடத்தியவர்களும் பலர் இலங்கையின் சுதந்திரதினம் கூட 1948-ம் ஆண்டு பெப்ர மாதம் யாழ்ப்பாணத்தில் கொண்டாடப்படாமல் காந்திமகானின் மறைவுக்காகத்துக்கம் அனுஷ்டித்ததால் ஒத்திவைக்கப்பட்டது. இன்றும் கூட காந்திமகானின் உருவப்படம் பலருடைய இல்லங்களையும் அலங்கரித்துக்கொண்டிருக்கிறது. ஆனாலும் அவருடைய போதனையோ அவர் வாழ்ந்துகாட்டிய வழிமுறையோ பின்பற்றப்படவில்லை. காந்திமகான் காட்டிய - போதித்த வழிகளை யாழ்ப்பாணப்பகுதி மக்கள் பின்பற்றி வாழ்பவர்களாக இருந்தால் இங்கு இன்னும் தீண்டாமைக் கொடுமை இருக்குமா? என்றுதான் திருந்துவதோ?

### 8-ம் கலத் தொடர்ச்சி

குள்ளாகியுள்ள பகுதியெல்லாம் காட்டு. என்னோடு பத்திரமாக இருக்கலாம் என்று அவர் நினைக்கிறார். அவரும் கஷ்டங்களை அனுபவித்துப் பார்க்கட்டும். அபாயங்களை எதிர்நோக்கட்டும்' என்று பாபு கூறினார்.

பினாதாஸ் வங்காள புரட்சிக்கட்சியில் ஓர் அங்கத்தவராய் இருந்தவர். பட்டப்படிப்பின்பின், பட்டம் பெறும் சமயம் வங்காள கவர்னரைச் சுட்டு ஜென்ம தண்டனை பெற்றவர். தண்டனை முடிவுற்று விடுதலையின்பின் காந்திஜியின் அகிம்சா இயக்கத்தின் கீழ் சமூகப்பணியில் ஈடுபட்டிருந்தார்.

நான் பினாவுடன் அவர்களின் கேம்ப் இருந்த இன்னொரு கிராமத்துக்குச் சென்றேன். அங்கே முஸ்லிம்களும் இந்துக்களும் அன்போடு ஒன்றாக இருப்பதைக் கண்டேன். புறக்கணிக்கப்பட்டவர்களுக்கும் அகதிகளுக்கும் கல்வி போதித்துக் கொண்டிருக்கும் பட்டதாரி ஆசிரியர் ஒருவரையும் சந்தித்தேன். இந்த ஆசிரியர் முஸ்லிம்கள் மத்தியில் மிகவும் பிரபல்யமாய் இருந்தார். வன்முறைகளின் போது இந்த ஆசிரியர் ஏறத்தாழ ஒருவார காலம் தென்னைமரம் ஒன்றின் மட்டைகளுக்கிடையில் ஒளிந்திருக்க நேர்ந்ததாம். முஜிம்பார் என்ற இந்தக் கல்கத்தா பல்கலைக்கழக ஆசிரியருக்கு அவரது முஸ்லிம் நண்பர்கள் இரவில் கயிற்றின்மூலம் உணவு வழங்கிப் பாதுகாத்தார்களாம்.

பினாதாஸும் டாக்டர் காலாங்காரும் அபாயங்களுக்கிடையில்சனங்களுக்கு உடைகள், உணவுகள், மருந்துகள் போன்றவற்றை விநியோகித்து வந்தார்கள். அங்கே ஏராளமான குண்டர்கள் ஒளிந்திருப்பதாக நான் அறிந்தேன். எனது டாக்டர் நண்பர் ஒரு முஸ்லிம் இல்லத்துக்கு அழைத்துச் சென்றார். அங்கே பெண்களும் பிள்ளைகளும் தான் இருந்தார்கள். ஆண்கள்மீது வாரண்டுகள் பிறப்பிக்கப்பட்டிருந்ததால் ஒளித்துக் கொண்டிருந்தார்கள். பெண்கள் கண்ணீரும் கம்பலையுமாகத் தமது கஷ்டங்களைக் கூறினார்கள். இந்துக்களாகிய நண்பர்களிடமிருந்து உதவிகள் கிடைப்பதற்காக நன்றி கூறினார்கள். மகாத்மா நவகாளிக்கு வந்ததற்காக அவர்கள் கடவுளுக்கு நன்றி கூறினார்கள். இல்லையென்றால் இன்னும் ஏராளமான இந்துக்கள் பலியாகியிருப்பார்கள் என்றார்கள். நெஞ்சில் பாரத்தோடு நான் நவகாளியிலிருந்து புறப்பட்டேன். கல்கத்தாவில் கஷ்டநிவாரண விடுதிகளுக்குப் போய் பார்த்தேன். அங்கு 50 ஆயிரம் பேர் அகதிகளாக இருந்தார்கள். நவகாளியில் நிலைகுலைந்துபோன விவசாயிகள் பலர் தமது சோகக் கதைகளைக் கூறினார்கள். அதன்பின் பிஜப்பூருக்குப் புறப்பட்டேன்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 2-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## "மறு பிறப்பு" என்று

மகாத்மா யாரும் தன்னை வந்து பார்ப்பதை விசேஷமாக தூர இடங்களில் இருந்துவருவதை விரும்பமாட்டார் என்றும் அவர்கள் கூறினார்கள். பாபு தன்னைத்தனிமையில் விட்டுவிடும்படியும், தனது பெரிய சோதனையில் எவரும் குறுக்கிடவேண்டாம் என்றும் கடுமையாக உத்தரவிட்டிருந்தாராம், இதனால் ஒருசில வங்காளிகளை மட்டும் தேர்ந்தெடுத்து தமது பணியில் பாபு ஈடுபடுத்திக்கொண்டிருந்தார் கல்கத்தா பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் நிர்மல் குமார் போஸ் அவரது செயலாளராகக் கடமையாற்றிக்கொண்டிருந்தார். மகாத்மாவின் குழுவில், மேலும் இரு குமாஸ்தாக்களும், ஒரு பணியாளும், அவரதுபேர்த்தியாரான குமாரி மனுவும் இருந்தனர். தம்முடன் வரும் பத்திரிகையாளர்களை ஆறுபேராக அவர் நிர்ணயித்திருந்தார். அவர்களில் இருவர் புகைப்படக்காரரர்.

பன்னிரண்டுபேர்கொண்ட இந்தக்குழு மகாத்மாவைப் பின்தொடர்ந்து ஒரு நாளைக்கு ஒருகிராமம் என்றமுறையில் கிராமம் கிராமமாகச் சென்றது. காலணியெதுவும் இல்லாமலே பாபுஜி நடந்தார். 1946-ம் ஆண்டு நவம்பர் மாதம் 7-ம் திகதி ஸ்ரீராம்புரியிலிருந்து மகாத்மா தமது பாத யாத்திரையை ஆரம்பித்தார்.

நான் கல்கத்தாவிலிருந்து பெப்ரவரிமாதம் புறப்பட்டு வங்காளத்திலுள்ள ஸ்ரீநகரை அடைந்தேன். அங்கே ஒரு மரத்தடியில் என் சாமான்களோடும், அவைகளைத் தூக்கிவந்த வங்காளி கூலியாளோடும் தங்கினேன்.

அன்றுமாலை பேராசிரியர் போஸை நான் சந்தித்தேன் அவர் என்னைப் பற்றியும் எனது யாத்திரை பற்றியும் விசாரித்தார். மகாத்மாவின் உத்தரவின்படி அவர்களின் யாத்திரையைப் பின்பற்றுவதற்கு நான் அனுமதிக்கப்படமாட்டேன் என்றும், மகாத்மா தங்கும் கிராமங்களில் அவர் அங்கிருக்கும்வரை தங்குவதற்கும் அனுமதிக்கப்படமாட்டேன் என்றும்அவர் எனக்குத்தெரிவித்தார்.

என்றாலும் அவர் சென்று எனது வருகைபற்றி மகாத்மாவிடம் தெரிவித்திருக்கிறார். மகாத்மா எனது வருகையை விரும்பவில்லை. வங்காள முதல்மந்திரியின் அனுமதியோடு நான் வந்திருக்கிறேனாவென்றும், 'ரேஷன்' புத்தகம் வைத்திருக்கிறேனாவென்றும் மகாத்மா கேட்டிருக்கிறார்

'பிஜப்பூரில் ரேஷன் புத்தகத்தை வைத்துவிட்டுவந்துள்ள அவருக்கு ஏழை மனிதர்களின் உணவைத்திருடுவதற்கு உரிமையில்லை. இவ்வளவு தூரம் செலவழித்துக் கத்திலுள்ள ஒரு கிராமத்தில் கழிக்கலாம் என்றும் கூறினார்.

கூலியாளுடன் எனது சாமான்களை மரத்தடியில் விடுத்துவிட்டு அன்றைய பிரார்த்தனைநடக்கும் இடத்துக்கு எனது காமிரா சகிதம் சென்றேன்.

பச்சை பசேலென பயிர்கள் வளர்ந்துநிற்கும் பின்னணியில் உயர்ந்த கமுகு மரங்கள் வானளாவிநிற்கும் சூழ்நிலையில் அந்த இடம் அமைந்திருந்தது. பாபுதமது 12 சகாக்களோடும் அமைதியாக வந்துசேர்ந்தார். ஊசி விழுந்தால் ஓசை எழும்படியாக அங்கு குழுமியிருந்த ஆண் பெண்கள் மத்தியில் அமைதிநிலவியது.

இரத்தம், கண்ணீர், பகை உணர்ச்சிஇசைகளினால் பாழ்பட்டுக்கிடக்கும் நாட்டின் ஆண், பெண் குழந்தைகளுக்கு அமைதியைக்கொண்டுவரும் தூதுவனைப்போல மகாத்மா காணப்பட்டார் மலர்களால் அலங்கரிக்கப்பட்ட ஒரு சிறியமேடையின் மீது மகாத்மா அமர்ந்தார். குமாரி மனு ஜெபமாலையைக் கொடுத்தவுடன், கண்களை மூடி பிரார்த்தனை செய்யத் தொடங்கினார் குமாரி மனு பகவத் கீதையைபடித்தார்.

பின்னர் மகாத்மா தமது பிரசங்கத்தை தமது மெலிந்த அமைதியான குரலில் ஆரம்பித்தார். கடவுளிடம் பூரண நம்பிக்கை வைக்கும்படியும், அயலவர்களை சகோதரர்போல் நேசிக்கும்படியும் அவர் கேட்டுக்கொண்டார் அப்பொழுதுதான் பகையையும் கோபத்தையும் நீக்கிக் கொள்ளமுடியும் என்றார்.

'எனது இந்த யாத்திரை' அவர் விளக்கினார் எனது வாழ்க்கையிலேயே மிக சிக்கலானதாகவும் கஷ்டமானதாகவும் இருக்கிறது. என் வாழ்க்கையில் முன் எப்போதுமே இவ்வாறு இருளை நான் அனுபவித்ததில்லை. நான் இங்கே, சூறாவளி பிரசார பிரயாணத்துக்காக வரவில்லை. இங்கே உங்களோடு ஒருவனாகத் தங்கவே நான் வந்திருக்கிறேன். இங்கேயே தங்குவதென்றும் உயிரையும் விடுவதென்றும் நான் உறுதிஎடுத்துக்கொண்டிருக்கிறேன். முஸல்மான்கள் மத்தியில் ஒரு தனி இந்து இளம் பெண்ணாவது சுதந்திரமாக நடமாடுவதற்கு அஞ்சாத நிலை ஏற்படும் வரை நான் வங்காளத்தில் தங்கியிருக்கப்போகின்றேன் எனக்கு நீங்கள் செய்யும் பெரிய உதவி உங்கள் மனங்களிலிருந்து பீதியைப் போக்கிக் கொள்வதுதான். அபாயத்தை எதிர்கொள்ளாமல் ஓடுவது ஒருவருக்கு மனிதன் மீதும் கடவுள் மீதும் இருக்கும் நம்பிக்கையை மட்டுமின்றி தன்னையே மறப்பதுமாகும்.

நம்பிக்கையை இழந்துவிட்டதாகக் காட்டிக்கொள்வதைவிட ஒருவர் மூழ்கிப் போகலாம். நான் இங்கே செய்யத் துணிந்துள்ள பணி எனது கடைசிப் பணியாக இருக்கலாம். நான் இங்கிருந்து உயிரோடு திரும்பினால் அது எனக்கு மறுபிறப்பாகவே இருக்கும்.

எனது அகிம்சை இங்கு சோதிக்கப்படுகின்றது. 'செய் அல்லது செத்துமடி' என்பது இங்கு சோதிக்கப்படவிருக்கிறது. 'செய்' என்பது இந்துக்களும், முஸல்மான்களும் அமைதியாகவும், அன்பாகவும் ஒருமித்து வாழ்வதற்குப் பழகிக் கொள்ளவேண்டும் என்பதாகும். இல்லையென்றால் இந்த முயற்சியில் நான் இங்கு சாகவேண்டும்.''

கூட்டம் முடிந்த பின்னர் காந்திஜி கிராமத்திலிருந்த பல வீடுகளுக்குச் சென்று அந்த மக்களின் கஷ்டங்களையும், துன்பங்களையும் கேட்டறிந்தார். ஓரிடத்தில் ஒரு கிராமத்தில் ஒருபகுதி முற்றாகவே எரிந்து சாம்பலாக்கப்பட்டிருப்பதை அவர் பார்த்தார்.

அடுத்த நாள் இன்னொரு கிராமத்துக்கு காந்திஜி போகவிருந்தார். அந்த யாத்திரையில் பொதுமக்களும் கலந்துகொள்ள வாய்ப்பிருந்ததால் என்னை அன்று காலை ஆறு மணிக்கே வந்து சேர்ந்துகொள்ளும்படி பேராசிரியர் போஸ் கூறியிருந்தார்.

அடுத்த நாள் அழிவு நடைபெற்றிருந்த இடங்களில் நான் சில படங்களை எடுத்தேன்.

அன்று காலை சரியாக ஏழு மணிக்கு பாபு தமது குடிசையிலிருந்து வலது கையில் மூங்கில் கழியொன்றையும் பிடித்தபடி வெளியில் வந்தார். உற்சாகமாகவும், சுகமாகவும் காணப்பட்டார். அந்தக் காட்சியை மறப்பது என்னால் முடியாத காரியம். அல்லற்பட்ட மக்களின் வரவேற்பை அவர் ஏற்றுக்கொண்ட பொழுது அவரிடம் காணப்பட்ட எளிமையான புன்முறுவலைப் பார்த்து நான் என் வசமிழந்துபோனேன். குடிசைக்கு வெளியில் வந்ததும் அவருடைய முதல் வார்த்தைகள் புதிதாக வந்திருக்கும் கர்நாடக படப்பிடிப்பாளன் (என்னை) பற்றியதாகும்.

பேராசிரியர் போஸ் என்னை அருகில் வரும்படி பணித்தார். நான் பாபுவின் அருகில் சென்றேன். அதுதான் மாக ஒரு முஸ்லிம் கிராமம். வழி நெடுகிலும் பாபுஜி ஒருடஸின் அலங்கார வளைவுகளுக்கு மேல் கடந்துசெல்ல வேண்டியிருந்தது. இளம் தளிர்களாலும், மலர்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. ''பாபுஜீ சுவாகதம்'', ''வந்தே மாதரம்'', 'ஜெய் ஹிந்த்'', ''ஹிந்து முஸ்லிம் எக் ஹொன்னி'' என்ற கோஷங்கள் வங்காளமொழியில் எழுதப்பட்டிருந்தன. ஓர் இடத்தில் வரவேற்பு என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்ததை அவர்விரும்பவில்லை. வழியில் ஒரு தனவந்தரான முஸ்லிம் இல்லத்தில் சில நிமிடங்கள் அவர் தாமதித்தார். அங்கு அவர் மிக பரிவோடு வரவேற்கப்பட்டார். வங்காளி வழக்கப்படி இந்துப் பெண்கள் குரவை போட்டு வரவேற்றனர்.

ஒருகூடைநிறைய பழங்கள் அவர்முன் வைக்கப்பட்டன. அங்கு கூடியிருந்த 'சிறுவர்களுக்கு அவைகளை பாபு பரிமாறினார். போகும்வழியில் இன்னொரு இடத்தில் ஒரு மரத்தின் சிறுகிளையில் இரண்டுவிதமான இலைகள்இருப்பது அவருக்கு காட்டப்பட்டது. கோஷ்டியில் வந்து கொண்டிருந்த பினாதாஸ், ஒரேமரத்தின் ஒருதனிக்கிளையில் இரண்டுவிதமான இலைகள் எவ்வாறு தளிர்க்க முடிந்தது' என்று வினவினார்.

'இந்துக்களும் முஸ்லிம்களும்போல; அப்படித்தான் அது நடக்கிறது ஒருவரோடொருவர் எப்படி இணைந்து வாழவேண்டும் என்று இயற்கையிடம் நாம் சற்றுக் கொள்ளவேண்டும்' என்று காந்திஜி பதிலிறுத்தார்.

இந்த மூன்று மைல் யாத்திரையில் வழியில்சுமார்இருநூறு முன்னூறுபேர்சேர்ந்து கொண்டார்கள்.

வழி மிகவும் குறுகியதாய் இருந்ததால் காமிராக்களோடுஎன்னால் பின்தொடர்வது சிரமமாகவே இருந்தது. மகாத்மா மிக வேகமாகவே நடந்தார். நவகாளியில் மரங்கள் எல்லாம்கூட மகாத்மாவை அமைதியாக வரவேற்பதுபோல அமைதியாக இருந்தன. அந்த இயற்கை சூழ்நிலையில் படம்எடுக்க முயற்சிசெய்து நான் வீழ்ந்தும் விட்டேன்.

தருமபுரிக்குச் சென்றடைந்ததும் மகாத்மாவின்பாதங்களை மனு வெந்நீரால் கழுவினார். அதன்பின் ஓய்வெடுத்துக்கொள்வதற்காக மகாத்மா தமது குடிசைக்குள் சென்றார். மீண்டும் நான் ஒருதனிஇடத்தில் இருக்கவேண்டியேற்பட்டது. பாபு தமது அன்றையதபால்களைப் பிரித்துப் பார்ப்பதை நான் கண்டேன். உடனடியாகவே எண்ணெய் ஸ்நா

வேண்டாமென்றும் மீண்டும் கேட்டுக்கொண்டார்,

1947 பெப்ரவரி 6ந்திகதி மகாத்மா பேசிய பேச்சின் ஒரு பகுதி இது தான் பத்திரிகைகளில் அது பிரசுரமாகியிருந்தது.

'பத்திரிகைக்காரர்கள்முயற்சிகளில் ஈடுபடாமல் தன்னோடு வருபவர்கள் கொடுக்கும் செய்திகளோடு திருப்தியடையவேண்டுமென்று அவர் யோசனை கூறினார். அவர் வெறுங்காலோடுநடப்பதற்கு அதிக பரபரப்புத் தேவையில்லை அவரைப் பொறுத்தவரை இந்த யாத்திரை புனிதமானஎளியயாத்திரைதான். இதில் பத்திரிகைக் காரர்களுக்கும் மற்றவர்களுக்கும் கவர்ச்சியளிப்பதற்கு ஒன்றுமில்லை. நவகாளியிலுள்ள மண் வெல்வெற்றுப்போலவும்புற்தரைகள் சிறப்பான கம்பளம் போலவும்இருக்கின்றன, பத்திரிகைக்காரர்கள்நேரத்தையும் பணத்தையும் மிச்சம் பிடித்து நவகாளி நிவாரண நிதிக்கு அல்லது அரிஜன நிதிக்கு பின்னர் கொடுக்கலாம்'.

எனக்குத் தெரியும். துணிச்சலை வரவழைத்துக்கொண்டு இந்தக்கடிதத்தில் ஆங்கிலத்தில் கையெழுத்திடும்படி ஐந்து ரூபாயை அவர் முன் வைத்தேன். மகாதேவின் கடிதம் ஆங்கிலத்திலிருந்ததால் இந்தியில் கையெழுத்திடுவது பொருந்தாது என்றும் சொன்னேன். பாபு சிரித்துவிட்டு கடிதத்தை எடுத்துக் கொண்டு, 'நீதந்திரக்காரன் போலிருக்கிறது' என்று கூறியபடி ஆங்கிலத்தில் கையெழுத்திட்டு பணத்தையும் திருப்பித்தந்தார் பின்னர் நான் அதே பணத்துக்கு கன்னடத்தில் கையெழுத்திடும்படி கேட்டேன் அவர் முன்னாலிருந்த பெட்டிக்குமேல் கிடந்த புத்தகமொன்றையெடுத்து அதிலிருந்து அவருடைய கன்னட கையெழுத்து மாதிரியொன்றையெடுத்தார். எனக்கு அதிர்ச்சியாய் இருந்தது அதனை நவகாளிக்கு ஏன் கொண்டுவந்தார்என்று வினவினேன்அவரால் கன்னடம், வங்காளி ஆகிய இரண்டில் தவிர ஏனைய எல்லா இந்திய மொழிகளிலும் கையெழுத்

### — நாராயணராவ் குல்கர்னி —

இந்தப் பிரசங்கத்தின் போது எல்லாருமே என்னைத் தான் பார்த்துக்கொண்டிருந்தார்கள். பேராசிரியர் போஸும் குமாரிமனுவும் நான் தொடர்ந்து நவகாளியில் இருக்கக்கூடாது என்று கூறினார்கள். அன்றிரவே தர்மபுரியைவிட்டு நான் புறப்படவேண்டியிருந்தது. எனவே நான் மகாத்மாவிடம் விடைபெற்றுக்கொள்வதற்கும் ஆசியைப் பெறுவதற்குமாக அவரிடம் சென்றேன். அவர் வழமைபோல் கால்களை சம்மனம்போட்டு மூங்கில்பாய்மேல் அமர்ந்திருந்தார். அவர் முன்னால் மரப்பெட்டியொன்றும்லாந்தர் விளக்கொன்றும் இருந்தன. சிலபுத்தகங்களும் கிடந்தன. லாந்தர் விளக்கின் திரி இறக்கி விடப்பட்டிருந்தது. இது அந்த சனங்களின் எண்ணெயை அதிகமாகப்பாவித்து விடக்கூடாதென்பதற்காகவிருக்கலாம்: நான் அவர் முன்போய் நின்றதும்திரியை ஏற்றிவிட்டு என்னை அமரும்படி பணித்தார். அவர் நவகாளியில் இருக்கும்வரை அவரைப் பார்க்க யாரும் வரக்கூடாதென்ற செய்தியைச் சொல்லும்படி என்னை பணித்தார். நான் மீண்டும் மன்னிப்புக்கேட்டேன். அவர்முறுவலித்துவிட்டு அருகில் வருப்படி சொன்னார். நான் அரசியல்வாதியுமல்ல, சமூகசேவகனுமல்ல. எனவே அந்த மகானின் அருகில் அதிகநேரம் இருப்பதுகஷ்டமாக இருந்தது. என்னால் முறையாகப் பேசவும்தெரியவில்லை.

திட முடியும் என்று கூறினார் வங்காளி கையெழுத்து மாதிரியையும் நான் கண்டேன். அவர் கன்னடத்தில் கையெழுத்திட்டு இலக்கங்களைக் கன்னடத்தில் எழுத முடியாததால் ஆங்கிலத்தில் திகதியையும் குறிப்பிட்டார்.

ஒரு மணித்தியாலம்வரை பாபுவோடு இருந்தேன். பாபுவின் நடவடிக்கைகளையும் செயல்களையும் நுணுக்கமாகக் கவனித்தேன். வழமைபோல் திடமாகவும் சுவாரஷ்யமாகவும் இருந்தார். அவருடைய ஞாபகசக்தியும் ஆச்சரியகரமாக இருந்தது. கர்னாடகத்தில் 1934ல் அரிஜன யாத்திரை மேற்கொண்ட சமயத்திலிருந்து இந்தக் கன்னடக் கையெழுத்து மாதிரி பிரதியை வைத்திருப்பதாக அவர் கூறினார்.

எனக்கு நேரமாகிவிட்டதால் அன்போடும் ஆதங்கத்தோடும் கண்களில் நீர் சொரிய மகாத்மாவின் கால்களைத் தொட்டேன். நவகாளியில் அதுதான் நான் அவரைக் கடைசியாகப் பார்த்தது. அதுவே எப்போதைக்கும் கடைசித் தடவையாக அமைந்துவிட்டது. நான் வெளியேறவிருந்த சமயம் பினாதாஸ் உள்ளே வந்தார். அவரைக் கண்டதும் பாபு என்னைக் கூப்பிட்டு 'பினா இந்தக் கர்னாடக படப்பிடிப்பாளரை அழைத்துப் போய் உன் முகாமைக் காட்டு. அழிவுக்

(1-ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org